
# பரத நாட்டியம்



- வினா-விடைகள்
- குறிப்புகள்
- படங்கள்

ஆக்கம் :

நாட்டியக் கலைமணி

செல்வி. நிலா இளங்கோவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதநாட்டியம்

## வினா - விடை

இந்நூல் :

- பரதக்கலை தொடர்பான விவரங்கள், சிறுகுறிப்புகள், பரீட்சைகளுக்கான வினா - விடைகள் அனைத்தும் கொண்டது.
- வடஇலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளுக்கும் க.பொ.த. சாதாரண தர, உயர்தர பரீட்சைகளுக்கும் தோற்றுவோருக்குப் பயன்தரும் வகையில் ஆக்கப் பெற்றது.
- பரதக்கலை பயில்வோருக்குப் பயன்தரும் வழிகாட்டி.

ஆக்கம் :

நாட்டியக் கலைமணி

**செல்வி. நிலா இளங்கோவன்**

உமா பதிப்பகம்,

521/1B, காலி வீதி,

கொழும்பு - 6.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **பரத நாட்டியம் வினா – விடை** |
| ஆசிரியர் | : | செல்வி நிலா இளங்கோவன். |
| பதிப்புரிமை | : | நூலாசிரியருக்கு. |
| முதற் பதிப்பு | : | நவம்பர், 2007. |
| விலை | : | 150/= |
| வெளியீடு | : | உமா பதிப்பகம்,<br>521/1B காலி வீதி,<br>கொழும்பு – 6. |
| விநியோகம் | : | லங்கா புத்தகசாலை<br>F.L. 1/14, டயஸ் பிளேஸ்,<br>குணசிங்கபுர, கொழும்பு – 12.<br>Tel : 011-2341942<br>Fax : 011-2459431 |
| ISBN | : | 978-955-1162-26-9 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் கல்விப் பணிப்பாளர், இலக்கிய வித்தகர்

கவிஞர் **த. துரைசிங்கம்** B.A. (Hons), Dip. in Ed, S.L.E.A.S.

வழங்கிய

# அணிந்துரை

ஆய கலைகள் அறுபத்துநான்கிலும் மிக உயர்ந்த கலை பரதக் கலையாகும். இக்கலையானது பலவித கலைகளைத் தன்னகத்தே அல்லது தனக்குத் துணையாகப் பெற்றுள்ளது.

நாட்டிய இலக்கணமானது பிரம தேவனால் வரையறுக்கப்பட்டது என்பர். நான்முகன் இருக்கு வேதத்திலிருந்து வாக்கியமும், யசுர் வேதத்திலிருந்து அபிநயமும், சாம வேதத்திலிருந்து கானம் என்னும் பாட்லும், அதர்வண வேதத்திலிருந்து ரச பாவங்களும் ஆகிய நான்கையும் எடுத்து ஒன்றாக்கி உலகின் மேன்மை மிக்க கலையாக நாட்டியக் கலையின் இலக்கணத்தை வகுத்தார். தாளம் தவறாத நாட்டியக் கலையில் மனித வாழ்வு மறுமலர்ச்சி பெறுகிறது. மனக்கிளர்ச்சியடைகிறது. அக்கிளர்ச்சியினால் புதுத்தெம்பு பிறக்கிறது. இக்கலையால் நமதறிவு சொல்ல முடியாததோர் ஆனந்த நிலையை அடைகிறது. அந்த ஆனந்த நிலை நமது செயற்பாடுகளுக்குத் தேவையான உற்சாகத்தை அளிக்கிறது.

உள்ளத்தின் எழுச்சியால் உடல் ஆடுகிறது. ஆரம்ப கால கட்டங்களில் அந்த ஆட்டம் வெற்று ஆட்டமாக இருந்தது. அதன் வரம்புகள் வகுக்கப்பட இல்லை. இன்று ஆடற்கலை மிக மிக வளர்ச்சி பெற்றுள்ளது. இசைக் கலையும் நாட்டியக் கலையும் இணைந்து செழித்துள்ளன. பரதக் கலை பயில்வோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றது.

பெருமைமிகு நடனக் கலை பயில்பவர்களுக்கும், பரீட்சைகளுக்குத் தோற்றுவோர்களுக்கும் துணை புரியும் வகையில் வினா - விடை நூல் ஒன்றில்லையே என்கிற குறை நீண்ட காலமாக நிலவி வந்தது. இக்குறையினைப் போக்கும் வகையில் ஆடற்கலை வல்லுநரான செல்வி. நிலா இளங்கோவன் இவ் வினா - விடை நூலினை ஆக்கியுள்ளமை பாராட்டுக்குரியது. வட இலங்கை சங்கீத சபை நடத்தும் பரீட்சைகளுக்கும், க.பொ.த. சாதாரணதர, உயர்தர பரீட்சைகளுக்கும் தோற்றுவோருக்கு இந்நூல் பெரிதும் பயன்படுமெனக் கருதுகிறேன். காலத்தின் தேவையறிந்து வெளிவரும் இந்நூலினைப் பரதக் கலை பயில்வோர் நன்கு பயன் படுத்துவரென எதிர்பார்க்கிறேன்.

**யாழ்ப்பாணம்** **த. துரைசிங்கம்**

01-09-2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகுதி : I

**1. பரதம் என்றால் என்ன?**

பாவம், ராகம், தாளம் இம்மூன்றின் சங்கமமே பரதம் எனப்படும்.

**2. ஆடற்கலையின் இருபெரும் பிரிவுகளும் எவை?**

1. தாண்டவம்
2. லாஸ்யம்

**3. இவற்றுக்குப் பொதுவான முக்கிய அங்கங்கள் எவை?**

1. நிருத்தம்
2. நித்தியம்
3. அபிநயம்

**4. 'தாண்டவம்'' என்றால் என்ன?**

திருக்கைலாயத்தில் சிவபெருமான் முன்னிலையில் எப்போதும் தவம் செய்து கொண்டு இறைவனின் நாட்டியத்தை என்றும் இரசிக்கும் பேறுபெற்ற 'தண்டு' என்ற முனிவரால் வகைப் படுத்தப்பட்ட இறைவனின் நாட்டியம் தான் 'தாண்டவம்'.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. **தாண்டவங்கள் எத்தனை?**

108.

6. **இவற்றில் முக்கியமானவை எவை?**

முக்கியமானவை 12. அவையாவன :

1. ஆனந்த தாண்டவம்
2. சந்தியா தாண்டவம்
3. சிருங்கார தாண்டவம்
4. திரிபுர தாண்டவம்
5. ஊர்த்துவ தாண்டவம்
6. முனி தாண்டவம்
7. சம்ஹார தாண்டவம்
8. உக்ர தாண்டவம்
9. பூத தாண்டவம்
10. பிரளய தாண்டவம்
11. புனாங்க தாண்டவம்
12. சுத்த தாண்டவம்

7. **சிவபெருமான் ஆடிய 108 தாண்டவங்களில் அவர் தாமாகவே ஆடியவை எத்தனை ?**

நாற்பத்தெட்டு

8. **பார்வதியுடன் இணைந்து ஆடியவை எத்தனை?**

முப்பத்தாறு

9. **திருமாலுடன் இணைந்து ஆடியவை எத்தனை?**

ஒன்பது

10. **முருகனுக்காக ஆடிக்காட்டியவை எத்தனை?**

மூன்று

11. **பிற தேவர்களுக்காக ஆடியவை எத்தனை?**

பன்னிரண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**12. லாஸ்யம் என்பது என்ன?**

பெண்கள் ஆடக்கூடிய நளினமான ஆட்டம். அபிநயத்துக்கு முக்கியத்துவம் அளிப்பது.

**13. நாட்டியம் என்பதன் பொருள் என்ன?**

மேடையில் ஒருகதையை ஆடல், பாடல் ஆகியவற்றுடன் அபிநயித்தல். நாட்டியம் என்பது நாடகமே. தற்போது இதனை நாட்டிய நாடகம் என்று வழங்குகின்றனர்.

**14. ஆடற் கலைக்குப் பொதுவான பெயர் என்ன?**

நடனம்

**15. பாத பேதம் என்றால் என்ன?**

பாதங்களின் பலநிலைகள்

**16. சபை வணக்கமாக அமைவது எது?**

அலாரிப்பு

**17. மன்மதனது பாணங்களில் மிகவும் துன்பத்தை அளிக்கும் பூ எது?**

முல்லை

**18. நாட்டிய உருப்படி வரிசையில் இரண்டாவதாக அமையும் உருப்படி எது?**

ஜதீஸ்வரம்

**19. பரத நாட்டிய நிகழ்ச்சிக்குப் பயன்படுத்தப்படும் லய வாத்தியக் கருவிகள் யாவை?**

1. மிருதங்கம்
2. தாளம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. **அடவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் ஆடல்வகை யாது?**

நிருத்தியம்

21. **நிருத்தம் (Pure Dance) என்றால் என்ன?**

தாள லயத்திற்கேற்ப அதிகமான உடலசைவுகள். அபிநயங்கள் ஆகியவை இல்லாது ஆடப்படுவது. வாத்திய இசையோ. வாய்ப்பாட்டோ இருக்காது.

22. **நிருத்தியம் என்றால் என்ன?**

இசை பின்னணியில் ஒலிக்க. உணர்வுகளையும். பாவங்களையும். கைகால் அசைவுகள். கண். கழுத்து. அசைவுகள் மூலம் வெளிப்படுத்தி ஆடுதல். இதற்குப் பாடல்கள் கிடையா. அதனால் அவற்றுக்கான அபிநயமும் கிடையாது.

23. **அபிநயம் என்பதன் பொருள் என்ன?**

'ஒரு நாடகம் அல்லது நிகழ்ச்சியை (பார்வையாளர்களுக்கு) எடுத்துச் செல்லுதல் அல்லது சொல்லுதல்' என்ற பொருள்படும். (Representing or Carrying a Play towards the Spectators) கதாபாத்திரங்களில் உள்ள உணர்வைப் பிரதிபலித்தல் என்றும் சொல்லலாம். ரஸாநுபவங்களையும் பாவத்தையும் அசைவுகள் மூலம் வெளிப்படுத்தல் என்றும் கூறலாம்.

24. **அபிநயங்கள் எத்தனை வகை? அவை எவை?**

நான்கு வகை.

1. ஆங்கிக அபிநயம்
2. வாசிக அபிநயம்
3. ஆஹார்ய அபிநயம்
4. சாத்விக அபிநயம்

25. **இசையிலும் நடனத்திலும் இன்றியமையாத உருப்படி எது?**

வர்ணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. **பரத நாட்டியத்தில் ஜதிகளைச் சொல்பவரை எப்படி அழைப்பர்?**

நட்டுவனார் என்று அழைப்பர்.

27. **ஆங்கிக அபிநயம் என்றால் என்ன?**

உடல் அசைவுகள். நிற்றல், நடத்தல், துள்ளுதல், தாண்டிக் குதித்தல், தலையசைவு, கண்ணசைவு, கழுத்தசைவு, கை அசைவுகள் (ஹஸ்தம் முத்திரைகள்), கால் அசைவுகள் (அடவுகள்) ஆகியன ஆங்கிக அபிநயமாகும்.

28. **வாசிக அபிநயம் என்றால் என்ன?**

வாய்ப் பேச்சு, வசனம், ஆகியவற்றால் ரஸம் (சுவை), பாவம் ஆகியவற்றை வெளிப்படுத்தல்; பாடலைப் பாடிக்கொண்டே ஆடுதல், அல்லது பின்னணியில் ஒலிக்கும் வசனம் அல்லது பாடலுக்கேற்றவாறு வாயசைத்துக் கொண்டே ஆடுதல்.

29. **ஆஹார்ய அபிநயம் என்றால் என்ன?**

ஆடை, ஆபரணங்கள் மூலம் அபிநயித்தல். நாடகப் பாத்திரம் ஆணா, பெண்ணா, குலமென்ன, வகுப்பென்ன, செய்யும் தொழிலென்ன, அந்தஸ்தென்ன, போன்றவற்றை அணியும் ஆடை ஆபரணங்கள், ஒப்பனை ஆகியவற்றால் வெளிப்படுத்தல்.

30. **சாத்விக அபிநயம் என்றால் என்ன? விளக்குக.**

எட்டு விதமான; உடல் - உள்ளம் - இரண்டின் நிலைகளை வெளிப்படுத்துதல்.

அவையாவன :

1. உடல் அசையாமலிருத்தல்.
2. வியர்வை வழிதல்.
3. பயத்தை வெளிப்படுத்துதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. குரலில் மாற்றத்தைக் காட்டுதல்.

5. நடுக்கம்.

6. உடல் வண்ணம் சிவத்தோ - வெளுத்தோ - கறுத்தோ மாறுபடுதல்.

7. கண்ணீர் வடித்தல்.

8. மயங்கி விழுதல்.

**31. ஆங்கிக அபிநயத்தின் மூன்று உட்பிரிவுகளும் எவை? விளக்குக.**

1. அங்க  2. பிரத்யங்க  3. உபாங்க

அங்க : தலை, கைகள், மார்பு, விலாப்புறம், இடுப்பு மற்றும் கால்கள் - இந்த உறுப்புகளின் அசைவில் காட்டப்படும் அபிநயம். (சிலர் கழுத்தை இப்பட்டியலில் சேர்ப்பர்)

பிரத்யங்க : தோள், மேற்கைகள், முதுகு, வயிறு, தொடை ஆகிய உறுப்புகளின் அசைவில் காட்டப்படும் அபிநயம். (சிலர் கழுத்தசைவை இப்பட்டியலில் சேர்ப்பர்)

உபாங்க : கண்கள், புருவங்கள், விழிகள், கன்னம், மூக்கு, தாடை, பற்கள், நாக்கு, உதடுகள், முகம், பாதங்கள், கணுக்கால்கள், குதிக்கால்கள், கால் விரல்கள், கை விரல்கள், ஆகியவைகளின் அசைவில் காட்டப்படும் அபிநயம். (சிலர் தோளையும் இப்பட்டியலில் சேர்ப்பர்)

**32. 'சம' என்றால் என்ன?**

ஆடாமல், அசையாமல், குனியாமல், நிமிராமல் சமநிலையில் தலை இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. 'உத்வாஹித' என்றால் என்ன?

தலையை உயர்த்துதல்

34. தலையைக் குனிதலை எப்படி அழைப்பர்?

'அதோமுக' என்றழைப்பர்.

35. 'ஆலோலித' என்றால் என்ன?

தலையை வட்டமாகச் சுற்றிச் சுழற்றுதல்.

36. தலையை இடமும் வலமும் அசைத்தலை எப்படி அழைப்பர்?

'துதம்' என்றழைப்பர்.

37. 'கம்பிதம்' என்றால் என்ன?

தலையை மேலும் கீழுமாக அசைத்தல்.

38. தலையை ஒரு பக்கமாகத் திருப்புதலை எப்படி அழைப்பர்?

'பராவிருத்தம்' என்றழைப்பர்.

39. 'உசிப்தம்' என்றால் என்ன?

தலையை ஒரு பக்கம் திருப்பி மேலே தூக்குதல்.

40. தலையை, பக்கத்துக்குப் பக்கமாக வெண்சாமரம் போல் அசைத்தலை எவ்வாறழைப்பர்?

'பரிவாஹிதம்' என்றழைப்பர்.

41. வீர ரஸத்தின் எதிர் ரஸம் யாது?

பயனாஹம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. மூன்று அங்கங்களையும் உடைய தாளம் எது?

ஜம்பைதாளம்.

43. சப்தம் என்னும் நாட்டிய உருப்படி பெரும்பாலும் அமைந்துள்ள தாளம் எது?

மிஸ்ரசாபு.

44. தூய நிருத்த வகையைச் சார்ந்த உருப்படி எது?

ஜதீஸ்வரம்.

45. பீபட்ச ரஸத்தின் எதிர் ரஸம் எது?

சிருங்காரம்.

46. கம்பீரமும் விறுவிறுப்பும் நிறைந்த நாட்டிய உருப்படி யாது?

தில்லானா.

47. ''தத்தெய்தாம் தித்தெய்தாம்'' அடவிற்கு மரபு ரீதியாக வழங்கப் பட்டிருந்த பெயர் யாது?

கோர்வை அடவு.

48. பாத்திரத்தின் அந்தப் பிராணன் எத்தனை?

பத்து

49. சந்திரனை அபிநயிப்பதற்குப் பயன்படுத்தும் முத்திரைகள் எவை?

பதாகம், அலபத்மம்.

50. 'நமஸ்துதே, தியானம் செய்குவோம்' என முடியும் உருப்படி எது?

சப்தம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**51. கண்கள் மற்றும் விழிகளால் ஏற்படுத்தப்படும் அசைவுகளும் 'பார்வையும்' எத்தனை வகைப்படும்? அவை எவை?**

எட்டு வகைப்படும். அவையாவன :

1. 'சம' – இமைகளை அசைக்காமல் நேராகப் பார்ப்பது.
2. 'ஆலோகித' – சட்டென்று உற்றுப் பார்த்தல்.
3. 'சாச்சி' – விழியோரப் பார்வை.
4. 'பிரலோகித' – பக்கத்துக்குப் பக்கமாக விழிகளை அசைத்துப் பார்த்தல்.
5. 'நிமீலித' – பாதி மூடிய கண்களால் பார்த்தல்.
6. 'உல்லோகித' – மேல் நோக்கிப் பார்த்தல்.
7. 'அனுவ்ரத' – மேலும் கீழும் விரைவாகப் பார்த்தல்.
8. 'அவலோகித' – கீழ் நோக்கிப் பார்த்தல்.

**52. நான்கு வகைக் கழுத்தசைவுகளும் எவை?**

1. 'சுந்தரி' – கழுத்தை இடமும் வலமுமாகப் பக்கவாட்டில் அசைத்தல்.
2. 'திரஸ்ஸினா' – கழுத்தை உயர்த்தி பக்கவாட்டில் (பாம்பு போல்) அசைத்தல்.
3. 'பரிவர்த்தித' – கழுத்தை இடமும் வலமும் பிறைச் சந்திரன் போல் அசைத்தல்.
4. 'பிரகம்பித' – கழுத்தை முன்னும் பின்னுமாக (ஆண் புறாவைப் போல்) அசைத்தல்.

**53. இருவகைக் கையசைவுகளும் எவை? விளக்குக.**

1. ஹஸ்தம்
2. முத்திரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஹஸ்தம் : கை முழுவதையும் ஆட்டி, அசைத்து, வீசிக் காட்டப்படும் அசைவுகள்.

2. முத்திரை : முன்கையையும் விரல்களையும் இணைத்துக் காட்டப்படும் குறியீடுகள்.

**54. ஒரு கை முத்திரைகள் (அசம்யுத ஹஸ்தங்கள்) எத்தனை? அவை எவை?**

ஒரு கை முத்திரைகள் 28 என்று 'அபிநயதர்ப்பணம்' என்னும் நூல் கூறுகிறது.

அவையாவான :

| | | |
|---|---|---|
| 1. பதாகம் | 2. திரிபதாகம் | 3. அர்த்த பதாகம் |
| 4. கர்த்தரீ முகம் | 5. மயூரம் | 6. அர்த்த சந்திரன் |
| 7. அராளம் | 8. சுகதுண்டம் | 9. முஷ்டி |
| 10. சிகரம் | 11. கபித்தம் | 12. கடகாமுகம் |
| 13. ஸுசி | 14. சந்திரகலை | 15. பத்ம கோசம் |
| 16. சர்ப்ப சீர்ஷம் | 17. மிருகசீர்ஷம் | 18. ஸிம்ஹ முகம் |
| 19. காங்குலம் | 20. அலபத்மம் | 21. சதுரம் |
| 22. பிரமரம் | 23. ஹம்சாஸ்யம் | 24. ஹம்ச பக்ஷம் |
| 25. ஸம்தம்சம் | 26. முகுளம் | 27. தாம்ர சூடம் |
| 28. திரிசூலம் | | |

**55. இரு கை முத்திரைகள் (ஸம்யுத ஹஸ்தங்கள்) எத்தனை? அவை எவை?**

இரு கை முத்திரைகள் 23.

அவையாவன :

| | |
|---|---|
| 1. அஞ்சலி | 2. கபோதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கர்க்கடம்
4. ஸ்வஸ்திகம்
5. டோலம் (ஊஞ்சல்)
6. புஷ்பபுடம்
7. உத்சங்கம்
8. சிவலிங்கம்
9. கடகாவர்த்தனம்
10. கர்த்தரீஸ்வஸ்திகம்
11. சகடம்
12. சங்கம்
13. சக்கரம்
14. சம்புடம் (சிமிழ்)
15. பாசம்
16. கீலகம் (பிணைப்பு)
17. மத்ஸ்யம் (மீன்)
18. கூர்மம் (ஆமை)
19. வராகம் (பன்றி)
20. கருடன்
21. நாகபந்தம்
22. கட்வா (கட்டில்)
23. பேருண்டம்

**56. 'ஒரு கை முத்திரைகளாகவும்', 'இரு கை முத்திரைகளாகவும்' சந்தர்ப்பத்திகேற்றவாறு பயன்படுத்தப்படும் முத்திரைகள் எவை?**

1. வியாக்ர
2. அர்த்தசூச்சி
3. கடகம்
4. பல்லி

ஆகிய நான்கும்.

**57. தெய்வங்களைக் குறிக்கும் முத்திரைகள் எத்தனை? அவை எவை?**

தெய்வங்களைக் குறிக்கும் முத்திரைகள் 16.

அவையாவன :

1. பிரம்மா
2. சிவன்
3. விஷ்ணு
4. சரஸ்வதி
5. பார்வதி
6. இலக்குமி
7. கணேசர்
8. கார்த்திகேயர்
9. மன்மதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. இந்திரன் 11. அக்கினி 12. யமன்

13. நிருதி 14. வருணன் 15. வாயு

16. குபேரன்

**58. சிவம் என்பதை உணர்த்த எம்முத்திரைகள் பயன்படும்?**

'மிருகசீர்ஷ' முத்திரையை இடது கையிலும் 'திரிபதாக' முத்திரையை வலது கையிலும் ஒரே நேரத்தில் பிடிப்பதன் மூலம் 'சிவம்' என்பதை உணர்த்தலாம்.

**59. 'திரிபதாகம்' முத்திரையை இரண்டு கைகளாலும் அபிநயித்தால் அது எத்தெய்வத்தைக் குறிக்கும்?**

விஷ்ணுவைக் குறிக்கும்.

**60. ஹஸ்தங்கள் எவ்வாறு காட்டப்படும்?**

கைகளை ஐந்து விதமாக (மேல் நோக்கி, கீழ் நோக்கி, வலது பக்கம், இடது பக்கம், முன் பக்கமாக) வீசி அசைப்பதன் மூலம் காட்டப்படும். அவ்வாறு கைகளை வீசி, அசைக்கும் போது கால்களின் அசைவுகளுடன் அவை இணைந்து வர வேண்டும். இடது பக்க ஹஸ்தம் என்றால் இடது காலும், இடது கையும் இடது பக்கம் அசைய வேண்டும். வலது பக்க ஹஸ்தம் என்றால் வலது காலும் வலது கையும் வலது பக்கம் அசையும்.

**61. சுத்த நிருத்தத்திற்குப் பயன்படும் முத்திரைகள் எத்தனை? அவை எவை?**

சுத்த நிருத்தத்திற்குப் பயன்படும் முத்திரைகள் 13

அவையாவன :

1. பதாகம் 2. ஸ்வஸ்திக் 3. டோலம்

4. அஞ்சலி 5. கடகாவர்த்தனம் 6. சகடம்

7. பாசம் 8. கீலகம் 9. கபித்தம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சிகரம் 11. கூர்மம் 12. ஹம்சாஸ்யம்

13. அலபத்மம்

**62. சூரியன் என்பதை எம்முத்திரைகள் மூலம் காட்டலாம்?**

'அலபத்மம்' இடது கையிலும், 'கபித்தம்' வலது கையிலும் பிடித்து இரண்டு கைகளையும் கழுத்தருகே காண்பித்தால் அந்த முத்திரை சூரியன் என்பதைக் குறிக்கும்.

**63. 'அலபத்மம்' இடது கையிலும் 'பதாகம்' வலது கையிலுமாக காண்பித்தால் அது எக்கிரகத்தைக் குறிக்கும்?**

சந்திரனை.

**64. நாட்டியத்தில் கால்கள் மற்றும் பாதங்களின் பங்கு என்ன என்பதை விளக்குக.**

தலை, கண், கழுத்து மற்றும் கைகள் ஆகியவற்றால் காட்டப்படும் அசைவுகளும், பாவங்களும், முத்திரைகளும் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் வாய்ந்தவை. கால்கள் மற்றும் பாதங்களின் அசைவுகள். கால்களால் நிற்பதும், துள்ளுவதும், தாண்டுவதும், பாதங்களால் நடப்பதும், உட்காருவதும், உட்கார்ந்து கொண்டு சுழல்வதும், நின்று கொண்டே சுழல்வதும் நாட்டியத்திற்கு அழகையும், எடுப்பையும், நிறைவையும் அளிக்கினறன.

**65. அடவு என்றால் என்ன?**

ஆடலின் ஒரு ஆதாரப் பகுதியைக் குறிக்கும்.
கால்கள் மற்றும் பாதங்களின் அசைவுகளை 'அடவு' என்பர். இது நடனத்தின் ஓர் அளவை என்றே கொள்ளலாம்.

**66. 'தட்டடவு' என்றால் என்ன? விளக்குக.**

தட்டடவு என்பது முதல் அடவாகும். இதில் கைகள் இரண்டையும் இடுப்பில் வைத்துக்கொண்டு, கால்களை லேசாக அகட்டி நிற்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். முழங்கால் அளவில் கால்களை பக்கவாட்டில் அகட்டி, மாறிமாறிக் கால்களைச் சற்றுத் தூக்கி, பாதங்களால் தரையைத் தட்ட வேண்டும்.

**67. பாதங்களின் அசைவுகளை அபிநய தர்ப்பணம் நூல் எத்தனை வகைகளாகப் பிரித்துக் கூறுகிறது? அவை யாவை?**

நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரித்துக் கூறுகிறது.

அவையாவன :

| | | |
|---|---|---|
| 1. | மண்டலம் | (Posture) |
| 2. | உத்பலவனம் | (Leaping Movement or Jumping) |
| 3. | ப்ரமரீ | (Flight Movement) |
| 4. | பாதசாரீ அல்லது சாரீ | (Gait) |

**68. நிற்கும் நிலைகள் பத்தும் எவை?**

1. ஸ்தானகம்
2. ஆயத்தம் (தயார் நிலை)
3. ஆலிதம்
4. ப்ரத் யாலிதம்
5. பிரேங்கனம்
6. ப்ரேரிதம்
7. ஸ்வஸ்திகம்
8. மோதிதம்
9. சமசூச்சி
10. பார்ஸ்வசூச்சி

**69. ஸ்தானகம் எத்தனை வகைப்படும்? அவை எவை?**

ஸ்தானகம் ஆறு வகைப்படும்.

அவையாவன :

1. சமபாதம்
2. ஏகபாதம்
3. நாகபந்தம்
4. ஐந்த்ரம்
5. கருடம்
6. பிரம்மம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**70. உத்பலவனம் எத்தனை வகைப்படும்? அவை எவை?**

உத்பலவனம் ஐந்து வகைப்படும்.

அவையாவன :

1. அளகம் 2. கர்த்தரீ 3. அஸ்வம்
4. மோதிதம் 5. கரிபாளகம்

**71. 'ப்ரமரீ' என்றால் என்ன?**

'பிரமரீ' என்றால் 'வண்டு' என்று பொருளாகும்.

நடனமாடுபவர் மேடையில் 'வண்டு' போல் சுற்றிச் சுற்றி அசைவதை 'ப்ரமரீ' குறிக்கும். இதில் ஏழுவகைகள் இருக்கின்றன.

**72. உத்ப்ளுடம் என்றால் என்ன?**

கால்களைச் சேர்த்து வைத்து அசையாத நிலையில் (சமபாதம்) உடலை முழுவதுமாகச் சுற்றுதல்.

**73. சக்ரம் என்றால் என்ன?**

சக்ரம் என்றால் காலைத் தூக்காமல், இரண்டு கையாலும் திரிபதாக முத்திரையைப் பிடித்துக் கொண்டு, உடலை வேகமாகச் சுற்றுதல்.

**74. கருடம் என்றால் என்ன?**

ஒரு பாதத்தை மற்றொரு பாதத்தின் மேல் நீட்டி முழங்காலைத் தரையில் அழுத்திக் கொண்டு கைகள் இரண்டையும் பக்கவாட்டில் நீட்டியவாறு வேகமாகச் சுழலுதல்.

**75. ஒரு பாதத்தை மட்டும் தரையில் ஊன்றிச் சுழலுதலை எவ்வாறழைப்பர்?**

ஏக பாதம் என்றழைப்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**76. ஒரு முழங்காலை மட்டும் தூக்கி மடித்துக் கொண்டு சுழலுதலை எவ்வாறழைப்பர்?**

குஞ்சிதம் என்றழைப்பர்.

**77. ஆகார்யம் என்றால் என்ன?**

அபிநய வகை. வேடம், உடை முதலியவற்றால் கருத்துக்களை வெளிப்படுத்துவது.

**78. இரண்டு பாதங்களையும் தூக்கி அரைவட்டமாகச் சுழற்றி நிறுத்துதலை எவ்வாறு அழைப்பர்?**

அங்கம் என அழைப்பர்.

**79. சாரிகள் எத்தனை வகைப்படும்? அவற்றை விளக்குக.**

சாரிகள் எட்டு வகைப்படும்.

அவையாவன :

1. சலனம் (Walking) - இருக்கும் இடத்திலிருந்து ஒரு காலை மட்டும் நீட்டி எடுத்து வைத்தல்.
2. சங்க்ரமணம் (Making a Leap) - இரண்டு பாதங்களையும் மாற்றி மாற்றி பக்கவாட்டில் தூக்கி வீசுதல்.
3. சரணம் (Moving) – பதாக முத்திரையை இரண்டு கைகளிலும் பிடித்தவாறே பாதங்களை ஒவ்வொரு அடியாக எடுத்துக் குதிக்கால்கள் இணையும் படி வைத்தல்.
4. வேகினீ (Running) - குதிக் கால்களாலோ, கால் விரல்களாலோ அல்லது முழுப்பாதத்தையும் ஊன்றியோ வேகமாக நடக்கும் அதே சமயத்தில், 'அலபத்மம்' மற்றும் திரிபதாகம் முத்திரைகளை மாறி மாறி இரண்டு கைகளாலும் அபிநயித்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. குட்டணம் (Pounding) – பூமியை ஒரு பாதத்தின் முன் பகுதியாலோ அல்லது (முழு) அடிப்பாதத்தாலோ அல்லது குதிக் காலாலோ ஒரு முறை ஓங்கிமிதித்தல்.

6. லுதிடம் (Rolling) – மேற்சொன்ன 'குட்டணம்' முறையை 'ஸ்வஸ்திக்' மண்டலத்தில் நின்றுகொண்டு அபிநயித்தல்.

7. 'லோலிதம்' (Trembling) – ஒரு காலால் மேற்சொன்ன குட்டணம் அபிநயித்தவுடன் மறு காலை மெல்ல ஓரடி நகர்த்துதல்.

8. விஷமம் (Rough) – இடது பாதத்தைத் தூக்கி வலது பாதத்திற்கு வலது பக்கமாகவும், வலது பாதத்தைத் தூக்கி இடது பாதத்திற்கு இடது பக்கத்திலும் மாறி மாறி வைத்து நடத்தல்.

**80. பத்து விதமான 'நடைகள்' எவை?**

| | |
|---|---|
| 1. வாத்து நடை | 2. மயில் நடை |
| 3. மான் நடை | 4. யானை நடை |
| 5. குதிரை நடை | 6. சிங்க நடை |
| 7. பாம்பு நடை | 8. தவளை நடை |
| 9. கம்பீர நடை | 10. மனித நடை |

**81. பாவம் என்றால் என்ன?**

உள்ள உணர்ச்சி பேதங்களை உருவமுள்ள அங்கங்கள் ஊடாக வெளிப்படுத்தும் போது அவை பாவமென அழைக்கப்படும். பாவங்கள் மூன்று வகைப்படும். அவற்றில் ஸ்தாயி பாவங்கள் எட்டு வகையானவை. சஞ்சாரி பாவங்கள் முப்பத்து மூன்று வகையானவை. சாத்துவித பாவங்கள் எட்டு வகைப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**82. பரதமுனி விபரிக்கும் எட்டு விதமான அகபாவங்களையும் ரசங்களையும் எழுதுக.**

| பாவங்கள் | | ரசங்கள் |
|---|---|---|
| 1. ரதி | (காதல்) | 1. சிருங்காரம் |
| 2. ஹாஸ | (சிரிப்பு) | 2. ஹாஸ்யம் |
| 3. ஸோக | (துன்பம்) | 3. கருணை |
| 4. குரோத | (கோபம்) | 4. ரௌத்திரம் |
| 5. உத்ஸாஹ | (உற்சாகம்) | 5. வீரம் |
| 6. பயா (நஹ) | (பயம்) | 6. பயனகம் (பயம்) |
| 7. ஜுகுப்ஸ் | (வெறுப்பு) | 7. பீபத்ஸம் |
| 8. விஸ்மயா | (அதிசயம்) | 8. அற்புதம் |

**83. அபிநவகுப்தர் குறிப்பிடும் ஒன்பதாவது ரஸம் எது?**

சாந்த ரஸம்

**84. தொல்காப்பியர் தொல்காப்பியத்தில் குறிப்பிட்டுள்ள ரஸங்கள் (சுவைகள்) எத்தனை? அவை எவை?**

எட்டு

| | | | |
|---|---|---|---|
| 1. வீரம் | 2. அச்சம் | 3. இழிப்பு | 4. காமம் |
| 5. அவலம் | 6. வியப்பு | 7. நகை | 8. நடுவுநிலை |

**85. சாத்தனார் எழுதிய கூத்து நூல் குறிப்பிடும் பாவங்களையும், ரஸங்களையும் எழுதுக.**

| பாவங்கள் | ரசங்கள் |
|---|---|
| 1. சாந்தி | 1. சாந்தம் |
| 2. காமம் | 2. சிருங்காரம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 3. | அற்புதம் | 3. | அற்புதம் |
| 4. | வீரம் | 4. | வீரம் |
| 5. | ரௌத்திரம் | 5. | ரௌத்திரம் |
| 6. | ஹாஸ்யம் | 6. | ஹாஸ்யம் |
| 7. | பயம் | 7. | பயாநகம் |
| 8. | கிருபா | 8. | கருணா சோகம் |
| 9. | பீபத்ஸம் | 9. | பீபத்ஸம் (வெறுப்பு) |

## 86. விபாவம் என்பதன் பொருள் என்ன? விளக்குக.

விபாவம் என்றால் யாதேனும் ஒரு உணர்ச்சிக்கு அடிப்படையாக அமைவது எனப் பொருள்படும். இதனை மேலும் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன, ஆலம்பன விபாவம், உபந்தீபன விபாவம் ஆகும். ஆலம்பன விபாவமானது ஒரு குறிப்பிட்ட உணர்ச்சியைத் தோற்ற அடிப்படையாக அமைவது எனப் பொருள்படும். உபந்தீபன விபாவமானது தோற்றப்பட்ட ஒரு குறிப்பிட்ட உணர்ச்சியைப் பன்மடங்கு அதிகரித்துக் காட்டுவதற்கு ஏதுவாக உள்ளது எனப்பொருள்படும்.

## 87. அனுபவ நிலையெனப்படுவது யாது?

விபாவத்தால் தட்டியெழுப்பப்பட்ட உணர்ச்சியினை அனுபவ நிலைக்குக் கொண்டுவந்து அக்குறிப்பிட்ட உணர்ச்சியினை அனுபவித்துக் காட்டுவதாகச் சித்திரித்துக் காட்டுவதாகும். சாதாரணமாக அனுபவத்தை அபிநயத்தின் மூலம் நாம் வெளிக்காட்டுகிறோம். இதனாற்றான் அபிநயத்தில் இடம் பெறும் அதிமுக்கிய உட்பிரிவுகளாகிய ஆங்கிகம், வாசிகம், ஆகார்யம், சாத்வீகம் என்னும் பிரிவுகள் அனுபவ நிலையில் அடங்குகின்றன.

## 88. வியாபிசாரி பாவம் என்றால் என்ன?

வியாபிசாரி பாவம் என்றால் ஒரு குறிப்பிட்ட உணர்ச்சிக்கு எதிரிடையாக அவ்வுணர்ச்சியினைத் தோற்றுவிப்பதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதுவானதாகும். அடிப்படை உணர்ச்சியினைப் பன்மடங்கு பெருக்கிக் காட்ட வல்ல பாவம் வியாபிசாரி பாவமாகும்.

எடுத்துக் காட்டாக கோபம், கோபத்தினால் உண்டான ஆவேசம் ஆகியவற்றை அவ்வாறே செய்து காட்டாது, அக்கோபத்தினை இழிவுபடுத்தி எள்ளி நகையாடிக் காட்டுவதன் மூலம் அக்குறிப்பிட்ட சுவையினைப் பன்மடங்கு அதிகரித்துக் காட்டுவதற்கு இது ஏதுவாகி வாய்ப்பளிக்கின்றது.

**89. சாத்வீக பாவம் என்பதன் பொருள் என்ன?**

இது குறிப்பாக பாத்திரத்தின் நிலையினை வெளிப்படுத்துதல் எனப் பொருள்படும். எடுத்துக் காட்டாக இன்ப உணர்ச்சியினையோ துன்ப உணர்ச்சியினையோ நடிகையானவள் தானாகவே தன் நிலையிழந்து, மெய்மறந்து உருவகித்துக் காட்டுதல் சாத்வீக பாவமாகும்.

**90. பரதமுனிவரின் கூற்றுப்படி எத்தனை பாவப் பிரிவுகள் உண்டு?**

41 பாவப்பிரிவுகள் உண்டு. இதில் நிரந்தரத் தன்மையுள்ள பாவங்கள், நிரந்தரத் தன்மையற்ற பாவங்கள் என இருவகையுண்டு.

**91. ஸ்தாயி பாவம் என்றால் என்ன?**

நிரந்தரத் தன்மையுள்ள பாவங்கள் எட்டையும் ஸ்தாயி பாவம் என்று கூறுவர்.

**92. ஸ்தாயி பாவங்கள் எவை?**

காதல், சிரிப்பு, துன்பம், கோபம், உற்சாகம், பயம், அதிசயம், வெறுப்பு ஆகிய எட்டுமாம். இவை எட்டு வகையான ரஸங்களைத் தோற்றுவிப்பதற்கு ஏதுவாகவுள்ளன. இவற்றைவிட சாந்தம் என்னும் ரஸப்பிரிவு பிற்கால வழக்கில் வந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 93. நிரந்தரமற்ற பாவங்கள் எவை? விளக்குக.

ஸ்தாயி பாவங்கள் எட்டும் தவிர்ந்த ஏனைய 33 பாவங்களும் நிரந்தரத் தன்மையற்ற வியாபிசாரி பாவங்களாகும். அடிப்படைப் பாவங்களான விபாவத்தை வலுவூட்டி மறையும் துணை பாவங்கள் இவ்வியாபிசாரி பாவம் எனலாம். நிரந்தர பாவங்களாகிய ஸ்தாயி பாவங்களை ஏற்படுத்த விபாவம் அவசியமானதாகும்.

## 94. சஞ்சாரி பாவம் என்பதன் பொருள் என்ன? விளக்குக.

ஒரு குறிப்பிட்ட ஆதாரத்தின் மேல் எழுப்பப்பட்ட பல்வேறு வித உணர்ச்சி பேதங்களைப் பல்வேறு விதமாக எடுத்துக் காட்டுதல் எனப் பொருள்படும். எடுத்துக் காட்டு: பிரிவுத்துயரானது சந்தேகம், பயம், சஞ்சலம், மயக்கம், வெகுளி, விரக்தி என்னும் பல்வேறு உணர்ச்சிகளைப் பல்வேறு தடவைகள் ஒரே ஆதாரத்திற்கு உருவகித்துக் காட்டும் போது அது சஞ்சாரி பாவமென அழைக்கப்படும்.

## 95. ரஸம் என்றால் என்ன?

பாவமானது சுவையினைத் தட்டி எழுப்புகின்றது. அச்சுவையே ரஸமென அழைக்கப்படுகிறது. பாவமும் ரஸமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைக்கப்பட்டு வளர்ந்து வந்துள்ளன. இதனாற்றான் பாவரஸமென ஒருங்கே வர்ணிக்கப்பட்டுள்ளது. பாவ உணர்ச்சிகளின் மேம்பாட்டு எழுச்சிகளே ரஸம் அல்லது சுவையாகும்.

## 96. "ஸ்வ பாவிகங்கள்" எனக் குறிப்பிடப்படுவன எவை?

அக பாவங்கள், ரஸங்கள் ஆகியவற்றுடன் நடனம், ஆடுவோர் பல மன அவஸ்தைகளையும் முக பாவத்தில் வெளிப்படுத்த வேண்டி இருக்கிறது. இவற்றைப் பரத முனிவர் நாட்டிய சாஸ்திரத்தில் ஸ்வபாவிகங்கள் என்று குறிப்பிடுகிறார். இவை முப்பத்து மூன்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

97. தஞ்சை நால்வர் என அழைக்கப்படுவோர் யாவர்?

1. தஞ்சாவூர் சின்னையா
2. தஞ்சாவூர் பொன்னையா
3. தஞ்சாவூர் சிவானந்தம்
4. தஞ்சாவூர் வடிவேலு

98. வேப்பிலையைக் கையிற் கொண்டு ஆடப்படும் கிராமிய நடனம் எது?

கரகம்.

99. பலராம அவதாரத்தைக் குறிக்கும் முத்திரை எது?

பதாகம், முஷ்டி

100. கலியுகத்தில் விஷ்ணு எடுக்கும் அவதாரம் எது?

கல்கி அவதாரம்.

101. ஜெய தேவரால் இயற்றப்பட்ட உருப்படியை எவ்வாறு அழைப்பர்?

அஷ்டபதி என்று அழைப்பர்.

102. அலைபோல் எழும்பியும் பாம்பு போன்று நெளிந்தும் ஆடும் நடனம் யாது?

மணிப்புரி

103. கிராமிய நடனத்திற்குப் பயன்படுத்தப்படும் தோல் வாத்தியத்தின் பெயர் என்ன?

உடுக்கு

104. கையில் ஆயுதங்கள் வைத்து ஆடப்படும் கூத்து மரபு யாது?

வடமோடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

105. சோழ மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் நாட்டியத்தில் வல்ல பெண்களுக்கு வழங்கப்பட்ட விருதினை எப்பெயரால் அழைத்தனர்?

'தலைக்கோலி' என்னும் பெயரால் அழைத்தனர்.

106. நாட்டுக் கூத்தினை நடாத்தி வைப்பவரை எப் பெயரால் அழைப்பர்?

'அண்ணாவியார்' என்று அழைப்பர்.

107. பரத நாட்டியக் கலை மறுமலர்ச்சிக்கு அயராது பாடுபட்டவர்களில் குறிப்பிடத்தக்கோர் இருவர் பெயர் தருக.

1. ஸ்ரீ. இ. கிருஷ்ணய்யர். 2. ஸ்ரீமதி ருக்மணிதேவி

108. 'கெட்டபெர' எனும் வாத்தியம் பிரதானமாக வாசிக்கப்படும் நடனவகை எது?

கண்டிய நடனம்

109. சிவனுக்குரிய ஹஸ்தத்தை எடுத்துக் கொள்ளும் தசாவதார ஹஸ்தம் எது?

நரசிம்மம்.

110. அங்காரகன் என்று அழைக்கப்படுபவர் யார்?

செவ்வாய்

111. இரு கைகளாலும் பதாக ஹஸ்தத்தினைப் பிரயோகித்துச் செய்யக் கூடிய ஸம்யுத ஹஸ்தங்கள் எத்தனை?

மூன்று

112. முருகன் மீது பக்திகொண்டு ஆடப்படும் கிராமிய நடனம் எது?

காவடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

113. உடலின் அசைவின்றிக் காலின் இயக்கத்தினை எடுத்துக் காட்டும் நடனம் எது?

கதக்.

114. செண்டை என்னும் தோல் வாத்தியத்தினை உபயோகிக்கும் நடனம் யாது?

கதகளி.

115. நாயகா, நாயகி பாவத்தை வெளிப்படுத்தும் உருப்படி யாது?

பதம்.

116. வீர ரஸத்தின் ஸ்தாயி பாவம் எதனை வெளிப்படுத்துகிறது?

உற்சாக உணர்வை.

117. அர்த்த சந்திர ஹஸ்தங்களைப் பிரயோகித்துச் செய்யும் ஸம்யுத ஹஸ்தம் எது?

கருடன்.

118. எட்டுச் சரணங்களைக் கொண்ட உருப்படி எது?

அஷ்டபதி.

119. ஆரம்பத்தில் சப்தம் என்னும் நாட்டிய உருப்படி பெரும்பாலும் அமைந்துள்ள இராகம் எது?

காம்போதி.

120. இராம நாடகக் கீர்த்தனைகளை இயற்றியவர் யார்?

அருணாசலக் கவிராயர்.

121. தாமஸ குணத்தை வெளிப்படுத்தும் ரஸம் யாது?

ரௌத்திரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

122. நடராசப் பெருமானால் ஆடப்பட்ட ஆனந்த தாண்டவம் இடம் பெற்ற சபை எது?

கனகசபை.

123. வலது கையில் பதாகமும் இடது கையில சிகரமும் பிடித்தால் வரும் ஜாதி ஹஸ்தம் எது?

சத்திரியர்.

124. தஞ்சை சின்னையா அவர்கள் பிறந்த ஆண்டு எது?

1802.

125. தஞ்சை சகோதரர்கள் உபயோகித்த முத்திரை யாது?

குருகுக.

126. பரதநாட்டிய நிகழ்ச்சிகளை ஒரு ஒழுங்கு கட்டமைப்புக்குள் கொண்டுவந்த பெருமைக்குரியவர் யார்?

திரு. பொன்னையா அவர்கள்.

127. ஹிந்துஸ்தானிய இசை மரபை ஒட்டிய நடனம் எது?

கதக்.

128. அர்த்த சந்திர ஹஸ்தங்களை இரு கைகளாலும் இணைத்து அபிநயிக்கும் தஸாவதார ஹஸ்தம் எது?

மத்ஸயம்.

129. நடனபாடம் பாடசாலைக் கல்வித்திட்டத்தில் புகுத்தப்பட்ட ஆண்டு எது?

1972.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

130. நந்தனார் கீர்த்தனைகளைப் பாடியவர் யார்?

கோபால கிருஷ்ண பாரதியார்.

131. 'சுக்கிரன்' என்று அழைக்கப்படுபவர் யார்?

வெள்ளி

132. நடராசப் பெருமானுடைய கையில் இருக்கும் வாத்தியம் எது?

உடுக்கு.

133. அருணாசலக் கவிராசர் இயற்றிய நூலின் பெயர் என்ன?

சீர்காழிக்கோவை.

134. சிவப்பு நிறத்திற்குரிய ரஸம் எது?

ரௌத்திரம்.

135. 'ஆலிங்கனே' - இதைப் புலப்படுத்தப் பிரயோகிக்கும் முத்திரை எது?

உத்ஸங்கம்.

136. அபிநய தர்ப்பணம் எனும் நாட்டிய நூலினை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?

கலாயோகி ஆனந்த குமாரசுவாமி.

137. கல்கி அவதாரத்தைக் குறிக்கும் முத்திரை யாது?

பதாகம், திரிபதாகம்.

138. கதைப் பாடல் ஒன்றிற்கு நடனம் அமைக்கும் முன்னர் முதலில் செய்ய வேண்டியது யாது?

பாடலைத் தெரிவு செய்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

139. **இரு கைகளிலும் சிகர முத்திரை பிடித்து பிரயோகிக்கப்படும் நவக்கிரக ஹஸ்தம் எது?**

வியாழன்.

140. **ஈழத்தில் நாட்டியத்துக்கான பாடல்கள், நாட்டிய நாடகங்கள் ஆகியவற்றைப் படைப்பதில் முன்னணியில் திகழ்ந்த கலைஞர்கள், யாவர்?**

- திரு. ஏ. சுப்பையா
- திரு. எம்.எஸ். நவரத்தினம்
- திரு. ம. கைலாசபிள்ளை
- பிரம்மஸ்ரீ என். வீரமணிஐயர்
- திரு. வேல் ஆனந்தன்

141. **அலாரிப்பில் இறுதியாக முடிவடைவது எது?**

சொற்கட்டு

142. **முத்திரைகள் உபயோகிக்கப்படுவது எதற்காக?**

கருத்தை வெளிப்படுத்துவதற்காக.

143. **12ஆம் நூற்றாண்டுகளில் நாட்டியக் கலைக்கு முக்கியத்துவம் கொடுத்த அரசர் யார்?**

இராஜ ராஜசோழன்.

144. **வெஸ் அணிந்து ஆடப்படும் நடனம் எது?**

கண்டிய நடனம்.

145. **வடமோடி கூத்தில் அரசர்களுக்குப் பயன்படுத்தும் முடி எது?**

கெருட முடி.

146. **"மகுட அடவு" என அழைக்கப்படுவது யாது?**

ததிங் கிண தொம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

147. பாத்திரத்தின் அந்தப் பிராணன் எது?

திருஷ்டி

148. இரு கைகளாலும் மிருக ஷீர்ஷ முத்திரையினை உபயோகித்துச் செய்யக் கூடிய இரட்டை கை முத்திரைகள் எத்தனை?

ஆறு (6)

149. "சக்ரவாகே" - இதைப் புலப்படுத்தப் பிரயோகிக்கும் முத்திரை என்ன?

அலபத்மம்.

150. நாலா புறமும் உள்ள பார்வையாளரை நோக்கி ஆடுவதாக அமையும் ஆட்டம் எது?

தென்மோடி.

151. கையில் வாள் ஒன்றே ஆயுதமாக வைத்து ஆடப்படும் கூத்து யாது?

தென்மோடி.

152. ரவீந்திர நாத் தாகூர் அவர்களால் பிரபல்யம் அடைந்த நாட்டிய வகை எது?

மணிப்புரி.

153. 'ஸ்நேஹே' - இதைப் புலப்படுத்தப் பிரயோகிக்கும் முத்திரை எது?

கீலக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

154. **பரதநாட்டிய நிகழ்ச்சியில் இடம் பெறும் இசைக் கருவிகள் எவை?**

| | | |
|---|---|---|
| மிருதங்கம் | – | தோல்கருவி |
| வயலின் | – | நரம்புக் கருவி |
| தம்புரா | – | நரம்புக் கருவி |
| வீணை | – | நரம்புக் கருவி |
| புல்லாங்குழல் | – | துளைக் கருவி |

155. **அபிநயம் என்பதன் பொருள் யாது? விளக்குக.**

'நாட்டிய சாஸ்திரத்தின் பொருளைக் காண்போருக்கு எட்டச் செய்வது' அதாவது அவையோரின் மனதில் படும்படி செய்வது என்பது அபிநயம் என்னும் சொல்லின் பொருளாகும். உடல் உறுப்புக்களின் அசைவுகளாலும், உரையாடலாலும், வேடத்தாலும், சாத்துவிகம் எனும் உளப்பாடுகளாலும் அவையோருக்கு நாட்டியப் பொருளை உணர்த்துவது அபிநயம் என்பதாம். அபிநயம் மூன்று வகைப்படும். அவை :

1. உடலால் செய்யப்படுவது.
2. முகத்தால் செய்யப்படுவது.
3. சேஷ்டையால் செய்யப்படுவது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகுதி : II

1. தென் இந்தியாவுக்குரிய நடனம் எது?

   பரதநாட்டியம்.

2. பரதநாட்டியத்தின் ஆரம்ப அப்பியாசம் எது?

   தட்டடவு.

3. நாட்டடவுகளின் எண்ணிக்கை எத்தனை?

   எட்டு.

4. குத்தடவின் சொற்கட்டு எது?

   தெய்ஹ தெய்ஹி ஆகும்.

5. அபிநயம் எத்தனை வகைப்படும்?

   நான்கு வகைப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. **மலர் தூவி அஞ்சலி செலுத்துவதை எப்படி அழைப்பர்?**

புஸ்பாஞ்சலி என்று அழைப்பர்.

7. **நடனத்தின் உட்பிரிவுகளில் ஒன்றை எழுதுக.**

நிருத்தம்.

8. **துரித காலத்தைக் காட்டும் குறி எது?**

......

......

9. **நாட்டியக் கலைக்குரிய அதிதெய்வம் யார்?**

நடராஜர்.

10. **சிங்க முகத்தையும், மனிதஉடலையும் எடுத்துக் கொள்ளும் தசாவதார ஹஸ்தம் எது?**

நரசிம்மம்.

11. **தாளத்திற்கு அமையாத உருப்படி எது?**

விருத்தம்.

12. **பரதநாட்டியக் கச்சேரியில் இதயம் போன்று அமைந்த உருப்படி எது?**

வர்ணம்.

13. **அன்னிய ஸ்வரத்தைக் காட்டும் குறி எது?**

*

14. **தியான ஸ்லோகத்தில் இறைவனது ஆங்கிகமாகக் குறிப்பிடப் படுவது எது?**

உலகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. **கருத்தைப் புலப்படுத்தும் கைகளின் அசைவுகளை எவ்வாறு அழைப்பர்?**

முத்திரைகள் என்று அழைப்பர்.

16. **ரஸ பாவங்களை உள்ளடக்கிய நடன பேதம் எது?**

நாட்டியம்.

17. **தியான ஸ்லோகத்தில் குறிப்பிடப்படும் தெய்வம் யார்?**

சிவன்.

18. **ஆண்மையும் மிடுக்கும் நிறைந்த நடன வகையைச் சிவனிட மிருந்து கற்றுக் கொண்டவர் யார்?**

தண்டு முனிவர்.

19. **நாட்டிய நமஸ்காரத்தில் வரும் இரட்டைக் கை முத்திரை குறிப்பது எதை?**

அஞ்சலி செய்வதை.

20. **பரத சூடாமணி என்பது என்ன?**

பரத நூல்.

21. **தாதெய் தெய்த அடவின் எண்ணிக்கை எத்தனை?**

நான்கு.

22. **கருத்தைப் புலப்படுத்தாத நடனம் எது?**

நிருத்தம்.

23. **திரிசூலத்தைத் தாங்கியிருக்கும் கடவுள் யார்?**

சிவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. 'ததிங்கிணதொம்' அமைந்துள்ள தாளம் எது?

ரூபகம்.

25. 'பல், உதடு' என்பவற்றை அபிநயிக்கப் பிரயோகிக்கும் முத்திரையின் பெயர் என்ன?

சிகரம்.

26. அஸம்யுத ஹஸ்தத்தில் பதினெட்டாவது முத்திரை எது?

சிம்ஹ முகம்.

27. காத்தல் தொழிலைச் செய்யும் தேவ ஹஸ்தம் எவை?

வ – த்ரிப தாகம். இ – த்ரிப தாகம்.

28. "சுற்றல்" - இதனைக் குறிக்கும் பாத பேதம் எது?

பிரம்மரீ.

29. பன்றி - இதனைக் குறிக்கும் முத்திரை எது?

வராகம்.

30. பஞ்ச நிருத்திய பரமானந்த தாண்டவமூர்த்தம் காணப்படும் சந்நிதி எது?

சிதம்பரம்.

31. "நாணம்" - இதற்குப் பிரயோகிக்கும் திருஷ்டி பேதம் யாது?

அவலோகிதம்.

32. பிராமண ஹஸ்தத்தினை எடுத்துக் கொள்ளும் நவக்கிரக ஹஸ்தம் எது?

குரு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. சமுதாய வாழ்க்கையைப் பிரதிபலித்து ஆடும் நடனம் ஒன்றின் பெயர் தருக.

குறவன், குறத்தி நடனம்.

34. பல மண்டலங்களும் முத்திரைகளும் சேர்ந்து உண்டாவது என்ன?

அடவு.

35. ஒரே வகையான பாத ரேகைகளையும் கைகளில் மாறுபட்ட செயற்பாடுகளையும் எடுத்துக்கொள்ளும் அடவு எது?

குதித்து மெட்டடவு.

36. காங்கூல முத்திரையில் மோதிர விரலை நீட்டினால் வரும் முத்திரை எது?

பத்ம கோசம்.

37. மரம், தீபம் முடி இவற்றைக் குறிக்கப் பிரயோகிக்கும் முத்திரையின் பெயர் என்ன?

திரிபதாகம்.

38. பரத சாஸ்திரம், அபிநய தர்ப்பணம் என்னும் நூல்களை இயற்றியோர் யாவர்?

பரதமுனிவர், நந்திகேஸ்வரர்.

39. இரஸங்கள் எவ்வேதத்திலிருந்து எடுத்துத் தொகுக்கப் பட்டுள்ளன?

அதர்வண வேதத்திலிருந்து தொகுக்கப்பட்டுள்ளன.

40. சம்யுத ஹஸ்தங்களின் இருபதாவது முத்திரை எது?

அலபத்மம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. **தகதிமி தக தரிகிட - எவை சேரும் போது உண்டாவது?**

சதுஸ்ரமும் கண்டமும் சேரும் போது உண்டாவது.

42. **ஸ்வரங்களால் அலங்கரிக்கப்பட்டு மனதிற்கு இன்பம் தருவது எது?**

இராகம்.

43. **ஒரு குறிக்கப்பட்ட நவக்கிரஹ ஹஸ்தத்தின் வலது இடது கைகளை மாற்றிப் பிரயோகித்தால் உருவாகும் தேவஹஸ்தம் என்ன?**

ஷண்முகன்.

44. **பாவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் நடனத்தின் உட்பிரிவுகளில் ஒன்றின் பெயர் எழுதுக.**

நிருத்தியம்.

45. **தாளத்தைச் சீராகக் கொண்டு செல்வது எது?**

லயம்.

46. **மயக்கம் - இதற்குப் பிரயோகிக்கும் சிரோ திருஷ்டி பேதம் எவை?**

ஆலோலிதம் – ஆலோகிதம்.

47. **திரியாங்கங்களை எடுத்துக்கொள்ளும் அபிநயவகை எது?**

ஆங்கிகம்.

48. **லாஸ்ய நடனத்தை உஷைக்குக் கற்றுக் கொடுத்தவர் யார்?**

பார்வதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. **இராதை, கிருஷ்ணன், தோழி இவர்களைக் கதாபாத்திரங் களாக எடுத்துக்கொள்ளும் உருப்படி எது?**

அஷ்டபதி.

50. **நோய் பிணிகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ள அம்மனை வேண்டி ஆடும் கிராமிய நடனத்தின் பெயர் என்ன?**

கரகம்.

51. **நவரஸங்களும் எவை?**

சிருங்காரம், ஹாஸ்யம், கருணை, ரௌத்திரம், வீரம், பயானகம், பீபத்ஸம், அற்புதம், சாந்தம்.

52. **நாடோடி நடனங்கள் எவை?**

கும்மி, கோலாட்டம், கரகம், காவடி போன்றவை.

53. **கோர்வை என்றால் என்ன?**

அடவுகளின் சேர்க்கை.

54. **சப்தம் என்னும் உருப்படி அமைந்துள்ள தாளம் எது?**

மிஸ்ரசாபு.

55. **ஜீவாத்மா, பரமாத்மா தத்துவத்தைத் தலைவன், தலைவி வாயிலாகப் புலப்படுத்தும் நாட்டிய உருப்படி எது?**

பதம்.

56. **"தஞ்சைப் பெருவுடையார் பேரிசை" என்னும் நூலை எழுதியவர் யார்?**

திரு. க. பொன்னையாபிள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57. மன்மத ஹஸ்தத்தில் உள்ள வலது கை கடகாமுகத்தைப் பதாகமாக மாற்றினால் உருவாகும் தேவஹஸ்தம் என்ன?

வருணன்.

58. நட்சத்திரங்களை அதிதேவதையாகக் கொண்டது எது?

கிங்கிணி.

59. திரிபதாக முத்திரை பாவிக்கப்படாத நாட்டடவுகளின் எண்ணிக்கை என்ன?

ஏழு.

60. தாளக் கட்டுப்பாட்டுக்குள் அடங்கி கருத்தைப் புலப்படுத்துவது என்ன?

நிருத்தியம் ஆகும்.

61. ஆபரணங்களால் கருத்தைப் புலப்படுத்தும் அபிநயம் என்ன?

ஆஹார்யம் ஆகும்.

62. தியான ஸ்லோகத்தில் குறிப்பிடப்படும் தெய்வமான சிவனின் ஆபரணங்கள் இரண்டு தருக.

சந்திரன், பாம்பு.

63. பிரம ஹஸ்தத்தின் விநியோகங்களில் ஒன்று கூறுக.

இறக்கை.

64. அடவுகள் ஆரம்பிக்கும் போது அதன் நிலை என்ன?

அரை மண்டி நிலை.

65. நடனம் சார்ந்த கல்வித்துறை எது?

நுண்கலைத்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66. உத்வேகத்துடன், மிடுக்காகவும் ஆடும் நடனம் எது?

தாண்டவம்.

67. 'சப்தம்' என்ற உருப்படியில் முதலாவதாக அமைந்துள்ள ராகம்?

காம்போதி.

68. பரதநாட்டிய சம்பிரதாய உருப்படியில் இறை அர்ப்பணமாக அமையும் உருப்படி எது?

அலாரிப்பு.

69. புல்லரித்தல், கண்ணீர் சிந்துதல் போன்ற செய்கைகளை எடுத்துக் கொள்ளும் அபிநயம் என்ன?

சாத்விகம்.

70. கடைக்கண் பார்வையைக் குறிக்கும் திருஷ்டி பேதம் எது?

ஸாசி.

71. 'சித்திரம் தீட்டல்' - இதற்குப் பிரயோகிக்கும் முத்திரை என்ன?

ஹம்ஸாசியம்.

72. மயிலின் அசைவைக் காண்பிக்கப் பிரயோகிக்கும் கண்ட பேதம் எது?

பிரகம்பிதம்.

73. மிருகசீர்ஷ ஹஸ்தங்கள் பிரயோகித்து உருவாகும் தசாவதார ஹஸ்தங்களின் எண்ணிக்கை என்ன?

மூன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74. **'தாளாங்கு தொம்' - இதற்குப் பிரயோகிக்கும் உத்பிளவன பேதம் எது?**

கிருபாலகம்.

75. **பாத்திர அந்த பிராணன்கள் எத்தனை?**

பத்து.

76. **'பரிவாஹிதம்' என்றால் என்ன?**

தலையைச் சிறிதாக ஆட்டடல்.

77. **வலது-சிகரம், இடது-பதாகம் ஆகிய முத்திரைகளை எடுத்துக் கொள்ளும் ஜாதி ஹஸ்தம் என்ன?**

க்ஷத்திரியம்.

78. **பஞ்ச பாணங்கள் என்பது என்ன?**

மன்மதனுடைய மலரம்புகள்.

அரவிந்த (தாமரை), அசோஹம் (அசோகப்பூ), நவமாலிகா (மல்லிகைப்பூ), நீலோற்பலம் (நீலஅல்லி)

79. **சுத்த நிருத்தத்திற்குப் பிரதானமாக அமைய வேண்டிய அம்சம் என்ன?**

லயம்.

80. **திஸ்ரமும், சதுஸ்ரமும் சேரும் போது உண்டாவது என்ன?**

தகிட தக திமி

81. **நமஸ்காரத்தின் போது இருகைகளும் சிகரமாகச் சுற்றி வருவது குறிப்பது யாரை?**

அஷ்டதிக்குப் பாலகரை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**82. மன்மதன், வில், தூண் ஆகியவற்றை அபிநயிக்கப் பிரயோகிக்கும் முத்திரை எது?**

சிகரம்.

**83. இசைக் கூத்து என்றால் என்ன?**

பண் ஆகிய இராகத்தை உயிராகவும், சொல்லாகிய பாடலை உள்ளமாகவும், தாளத்தட்டை உடலாகவும் கொண்டு ஆடப்படுவது.

**84. காட்சிக் கூத்து என்பது என்ன?**

கண்ணில் தோன்றும் பாவத்தை உயிராகவும், உடலின் அசைவுகளை உள்ளமாகவும், கையில் காட்டப்படும் அபிநயங்களை உடலாகவும் கொண்டு ஆடப்படுவது.

**85. நாட்டிய அலங்காரத்தினை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்? அவை எவை?**

நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

(1) அணி மணி அலங்காரம் (2) ஒப்பனையலங்காரம்

(3) தலையலங்காரம் (4) உடையலங்காரம்

**86. கரணங்கள் என்றால் என்ன? அவை எத்தனை வகை?**

உடலை வளைத்துக் கால்களை நீட்டியும் கைகளைப் பல வித்தியாசமான கோணங்களில் அசைப்பதற்குக் கரணங்கள் (அஃதாவது (நிற்கும்) சிற்ப நிலைகள்) என்று பெயர். இவை 108 வகைப்படும்.

**87. பாம்பைக் காட்டுவதற்கு உபயோகிக்கும் முத்திரை எது?**

சர்ப்ப சீர்ஷம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

88. **தமிழர் கிராமிய பண்பாடுகளை விளக்கும் நடனங்கள் எவை?**

தெம்மாங்கு, கும்மி, காவடி.

89. **அட்டமிச் சந்திரனைக் குறிக்கும் முத்திரை என்ன?**

அர்த்த சந்திரன்.

90. **பாணா சுரனின் மகள் பெயர் என்ன?**

உஷை.

91. **அனுபாவம் என்றால் என்ன? விளக்குக.**

அனுபாவமாவது உணர்சசி பேதங்களை நாமாகவே அனுபவித்துக் காட்டுதலாகும். அனுபாவப் பிரிவில் நாட்டியத்திற்குத் தேவையான ஆங்கீகம், ஆகாரியம், வாசிகம், சாத்வீகம் என்னும் அபிநயப் பிரிவுகள் அடங்குகின்றன.

92. **'சங்கீத சாராம்ருதம்' என்னும் நூலின் ஆசிரியர் யார்?**

மராட்டிய மன்னர் துளஜா மகாராசா.

93. **நந்திகேஸ்வரரால் நாட்டிய உலகிற்குக் கிடைத்த செல்வம் என்ன?**

தாண்டவம்

94. **இந்திய நடனங்கள் எவை?**

பரதநாட்டியம், மணிப்புரி, கதக், கதகளி, யக்ஷ கானம், குச்சுப்புடி, ஒடிசி, பாகவதமேளம்.

95. **தமிழருடைய மங்கல வாத்தியங்களில் ஒன்றைக் கூறுக.**

தவில்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

96. **தலையில் குடம்வைத்து ஆடும் நடனம் எது?**

கரகம்.

97. **இரு பதாகங்களையும் குறுக்கே பிடித்தால் வருவது என்ன?**

ஸ்வஸ்திகம் ஆகும்.

98. **எலுமிச்சம் பழம், பாக்கு மரம் இவற்றினை அபிநயிக்கப் பிரயோகிக்கும் முத்திரை எது?**

காங்கூலம்.

99. **ஸா; இவ் அடையாளத்தை எடுத்துக் கொள்ளும் அட்சர காலங்கள் எத்தனை?**

நான்கு.

100. **'0' இவ்வடையாளத்தை எடுத்துக் கொள்ளும் தாள அங்கம் என்ன?**

த்ருதம்.

101. **குபேர ஹஸ்தத்தின் வலது முஷ்டி அப்படியே இருக்க இடது அலபத்மத்தை ஸூசியாக மாற்றினால் உருவாகும் நவக்கிரக ஹஸ்தம் என்ன?**

புதன்.

102. **நடனக் கோர்வைகள் (ஜதிக் கோர்வைகள்) என்றால் என்ன?**

நடனக் கோர்வைகள் என்பது தனித்தனி வகையாகப் பயின்ற நடன அடவுகளை அழகாகவும் தாளக் கணக்குக்கு ஏற்பவும் ஒன்றோடு ஒன்று சேர்த்து அணிகலன்களைப்போல உருவாக்கப்பட்ட தொடர் அடவுகளாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**103. பரத நாட்டிய உருப்படிகளில் முக்கிய பிரிவுகள் எவை?**

1. ஆரம்ப துதிப் பாடல்கள்
2. ஜதீஸ்வரம் மற்றும் சூலாதிகள்
3. ஸப்தங்கள்
4. வர்ணங்கள்
5. பதங்கள்
6. ஜாவளிகள்
7. தில்லானாக்கள்
8. அலங்கார நடனங்கள்
9. குறுநாட்டிய நாடகங்கள்
10. ஏனைய நாட்டியங்களைத் தழுவிய நடனங்கள்

**104. ஆரம்ப துதிப்பாடல் நடனங்கள் என்றால் என்ன?**

ஒரு நிகழ்ச்சி ஆரம்பிக்கும் போது கடவுள், குரு, சபையோர் இவர்களை வணங்கிச் செய்யப்படுகின்ற நடனங்கள், ஆரம்ப துதிப் பாடல் நடனங்கள் எனப்படும்.

**105. ஆரம்ப துதிப் பாடல் நடனங்கள் சிலவற்றின் பெயர் தருக.**

1. அலாரிப்பு
2. புஷ்பாஞ்ஜலி
3. கணேசாஞ்ஜலி
4. குரு பாதாஞ்சலி அல்லது குரு ஸ்துதி
5. கவுத்துவம்
6. மல்லாரி
7. தோடைய மங்களம்
8. தேவர் நாமஸ்மரணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

106. **ஸாம வேதத்தின் உபவேதமாகக் கருதப்படுவது எது?**

காந்தர்வ வேதம்.

107. **பண்டைத் தமிழிலக்கியங்களில் முருகன் ஆடியதாகக் கூறப்படும் ஆடல் எது?**

துடியாடல்.

108. **"பீபத்ஸம்" என்பது குறிப்பது எதனை?**

வெறுப்பினை.

109. **"தகப்பன் ஸ்வாமி" என்று அழைக்கப்படும் கடவுள் யார்?**

குகன்.

110. **நாட்டியத்திற்கு ஆதாரமானவை எவை?**

பாவம், ராகம், தாளம்.

111. **மட்டக்களப்பு மக்களிடை வழங்கிவரும் பாரம்பரிய நடனம் எது?**

கொம்பு முறி நடனம்

112. **தென்னிந்திய நாட்டிய மேதைகள், இசை வல்லுநர்கள் தோன்றிய இடம் ஒன்று தருக.**

தஞ்சாவூர்.

113. **சமஸ்கிருத மொழியில் இராமாயணம் இயற்றிய மகரிஷி யார்?**

வால்மீகி.

114. **'அபிநய தர்ப்பணம்' என்பது என்ன?**

நந்திகேஸ்வரரின் நாட்டிய நூலாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**115. விஷ்ணு ஆமை உருவெடுத்த அவதாரம் என்ன?**

கூர்ம அவதாரம் (கூர்மம் – ஆமை)

**116. தொழிலைச் சித்திரிக்கும் கிராமிய நடனம் ஒன்று எழுதுக.**

உழவர் நடனம்.

**117. பண்டைக் காலத்தில் பரதக் கலையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வழங்கப்பெற்ற பட்டம் எது?**

தலைக்கோலி என்னும் பட்டம்.

**118. நரகாசுரனை அழித்ததற்காகக் கொண்டாடப்படும் விழா எது?**

தீபாவளி.

**119. மிஸ்ரஜாதி துருவ தாளத்தின் எண்ணிக்கை என்ன?**

இருபத்து மூன்று

**120. 'அரங்கேற்றம்' - என்பதனை விளக்குக.**

பயிற்சி முடிந்த ஒரு மார்கம் (அலாரிப்பு முதல் தில்லானா வரை) அல்லது இரண்டு மார்கங்கள் முடிந்த பின் முதல் முறையாக அரங்கேறி ஆடுவது 'அரங்கேற்றம்' என்று குறிக்கப்படும். அரங்கேற்றம் அவையோருக்குப் புதிய நடனக் கலைஞரை அறிமுகமாக்கும் விழா. அத்தோடு மாணவி குருவிற்கும், பக்கவாத்தியக் கலைஞர்களுக்கும் தன் மரியாதையை உணர்த்தும் வகையில் புத்தாடைகளும், பொன்னும் வழங்கி வணங்க வேண்டிய விழாவாகும். அரங்கேற்றம் என்பது கலைவாழ்வின் புனிதமான தொடக்கம் எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**121. அலங்கார நடனங்கள் சிலவற்றின் பெயர் தருக.**

காவடி நடனங்கள், கரக நாட்டியம், ராதாகிருஷ்ண நடனம், சிவதாண்டவம், சக்திநாட்டியம், கீதோபதேசம், குறத்தி நடனம், மயில் நடனம், ஆண்டாள் நடனம், மீரா நடனம், கோபியர் நடனம், காளிங்க நடனம்.

**122. குறு நாட்டிய நாடகங்கள் சிலவற்றின் பெயர் தருக.**

சீதா கல்யாணம், இராம சரிதம், பொன்மான்வதம், வாலிவதம், பாஞ்சாலி சபதம், கிருஷ்ண லீலா, கீதோபதேசம், பாரிஜாதம்.

**123. மேல் நாட்டு நடனங்களின் முக்கிய இரு பிரிவுகளும் எவை?**

1. சாஸ்திரீய "பாலே" (Ballet) நடனம்.
2. நிகழ்கால புதிய நடனம். (Moden Dance)

**124. (அ) பாத்திரத்தின் அந்தப் பிராணன் என்றால் என்ன?**

நடனமாடுபவருக்கு இருக்க வேண்டிய இலட்சணமாகும்.

**(ஆ) பாத்திரத்தின் அந்தப் பிராணன் எவை?**

1. ஜவக் – விரைவு
2. த்ரத்துவம் – உறுதி
3. ரேகா – வடிவம்
4. ப்ரமரி – சுற்றுதல்
5. திருஷ்டி – கண்பார்வை
6. அஷ்ரமஹ – களைப்பின்மை
7. மேதா – புத்திக் கூர்மை
8. சிரத்த – ஆர்வம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. வசோ – சுத்தமானபேச்சு

10. கீதம் – பாடும் முறை

ஆகிய பத்தும் நடனமாடும் பெண்களுக்குரிய அந்தப் பிராணன் (பாத்திரப் பிராணம்) ஆகும்.

**125. பாத்திரத்தின் பகிர்ப் பிராணன்கள் எவை?**

மத்தளம், தாளம், குழல், வீணை, சுருதி, கிண்கிணி, கீதம், நட்டுவன் ஆகியவை நடனமாடும் நர்த்தகியின் பகிர்ப் பிராணன்களாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகுதி : III

## சிறுகுறிப்புகள்

1. **அடவு :**

ஒரு தாளத்திற்கு அமைய, ஒரு கால் அசைவினையும் ஒரு கை அசைவினையும், ஒரு உடல் நிலையினையும் லய சுத்தத்துடன் செய்யும் போது அடவு என்போம்.

2. **கண்டிய நடனம் :**

கண்டியைச் சேர்ந்த நடன விற்பன்னர்களால் தமது சொந்த மொழி, கலை, கலாசார, சமூக, சமயப் பண்பாடுகளுடன் கூடி இந்நாட்டியக் கலை வளர்க்கப்படுகின்றது. இது சிங்கள மக்களின் கலாசார நாட்டிய வடிவமாக அமைந்துள்ளது.

கண்டிய நடனக் கலையானது நான்கு முக்கிய வகையான நடனங்களை உள்ளடக்கிய நடனமாகும். அவையாவன: வெஸ் நடனம், நையாண்டி நடனம், பந்தரு நடனம், உடுக்கு நடனம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **அல்லியம் :**

கண்ணனின் மாமனாகிய ஹம்சன் அனுப்பிய யானையின் கொம்பை ஒடித்தபின் கண்ணன் ஆடிய நடனம் அல்லியம் ஆகும். அதனையே அலிப்பேடு என்றும் கூறுவர்.

4. **கொடுகொட்டி :**

சிவபிரான் தன் புன்முறுவலினால் திரிபுர அசுரர்களை எரித்தபின் வெற்றிக்களிப்பில் அன்னை பார்வதியுடன் கைகொட்டி ஆடிய நடனம்.

5. **குடைக் கூத்து :**

இது முருகன் தன் குடையினை முன்னே சரித்து ஆடிய நடனமாகும்.

6. **குடக்கூத்து :**

இது பாணாசுரன் தன்மகள் உஷை என்பவள் காரணமாக, காமன் மகன் அநிருத்தனைச் சிறைப்படுத்தியதனால், திருமால் பாணனை அழித்தல் வேண்டுமென வேண்டி ஆடிய நடனமாகும்.

7. **பேடாடல் :**

இது காமன் தன் மகன் அநிருத்தனைச் சிறையினின்று மீட்டபின் ஆண்மைத் தன்மையில் பெண்மைக் கோலம் பூண்டு ஆடிய நடனமாகும்.

8. **துடியாடல் :**

இது ஆடல் நடுவே, வேற்றுருவாய் நின்ற சூரனின் வஞ்சனைச் சிந்தனையை அறிந்த முருகப் பெருமான், அவனைக் கோன்று கடல் அலையைத் தளமாகக் கொண்டு நின்று ஆடிய நடனம்.

9. **பாண்டரங்கம் :**

இது சிவபிரான் திரிபுரம் எரிக்கச் சென்ற போது திசைமுகனாகிய நான்முகன் காண வெண்ணீறு பூண்டு ஆடிய நடனம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. தாண்டவம் :

தாண்டவமானது சிறந்த துரித கால்வீச்சுக்கள், திருப்பங்கள், உயிர்ப்பூட்டும் சாந்த சொரூபநிலைகள், கம்பீரமான தோற்றங் களையும் செயற்பாடுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இது நாட்டியக் கலையில் நிருத்த வகையைச் சார்ந்ததாகும். உயிர்ப்பூட்டும் எழில் தவழும் நிலைகளை இது தன்னகத்தே கொண்டுள்ளது.

நிருத்த கூறாகிய தாண்டவக்கூறு பகுதி பகுதியாகவோ அன்றித் துண்டு துண்டாகவோ ஆடப்படும் நடனம் அன்று. தாண்டவத்துக்கே உரிய பாட்டுடன், லயசுத்தத்துடன், கம்பீரம் வழுவாமல் ஆடிய நாட்டியமாகும். தாண்டவக்கூறு நாட்டியத்தில் ஆடவருக்கே பொருத்தமானது எனக் கருதப்பட்ட போதிலும் கூட, இதனைப் பெண்களும் ஆடலாம் என்பதனைச் சிதம்பர நடனச் சிற்பங்கள் பெண் சிற்பங்களாக இருப்பதிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

## 11. நாட்டியம் பயில்வதால் ஏற்படும் பயன்கள் :

நாட்டியம் பயில்வதால் உள்ளமும் உடலும் உரம் பெறுகிறது. உடலின் ஒவ்வொரு அவயங்களும் தனித்தனியாக இயக்கப் பெற்றுச் சிறந்த ஆரோக்கியத்தைப் பெறுகின்றன. நாட்டியம் பயில்வதால் பலவிதமான நோய்களிலிருந்து உடலானது காப்பாற்றப்படுகிறது. நாட்டியத்தைப் பார்க்கும் மனிதனும் ஆடுகின்ற மனிதனும் தர்மார்த்த காம மோக்ஷமாகிய நான்கு புருஷார்த்தங்களையும் பெறுகின்றான்.

இதனால் இவர்களது உள்ளமும் உடலும் செம்மையுறுகிறது. நாட்டியத்தினைச் செய்வதால் நரம்பு சம்பந்தமான நோய்கள் வருவதில்லை. மேலும் உடலின் தேவையற்ற சதைவளர்ச்சியைக் குறைப்பதுடன் தேவையான சதை வளர்ச்சியை அதிகரிக்கச் செய்கின்றது.

## 12. நாட்டியத்திற்கேற்ற இசைக்கருவிகள் :

முற்காலத்தில் நாட்டியத்திற்கென இருந்த கருவிகள் மத்தளம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது சுத்த மத்தளம், முகவீணை, புல்லாங்குழல், யாழ் ஆகியவை ஆகும். தற்காலத்தில் ஹார்மோனியம், வயலின், சிதார், வீணை, கிளாரினெட், புல்லாங்குழல், பியானோ, தபேலா, மிருதங்கம், கோல் மற்றும் டோல்கி பல்வகை தாள துணைக் கருவிகள் (Effects Instruments) பம்மை, உடுக்கை, ஆகியன பயன்படுகின்றன.

## 13. நிருத்ய ஆபரணங்கள் :

நெற்றிச்சுட்டி, சூரிய சந்திர சுட்டிகள், இராக்கொடி, காதுத்தோடு, காதுஇழை என்கின்ற தொங்கட்டான் (ஜிமிக்கி), நாசிபிறை என்கின்ற புல்லாக்கு, நாசியில் போடுகின்ற நந்து, வங்கிகள், கைவளையல்கள், உள்கழுத்து ஆரம் (நெக்லஸ்), நீள் கழுத்து ஆரம், முத்துமாலை, இடைமாலை, உடியாணம், நூபுரமாலை, ஜடைபின்னை, குஞ்சலம், நாகஜடை, மோதிரம், பஞ்ச உங்குரம் அல்லது மோதிரத்தோடா, சலங்கை, காசுமாலை.

## 14. நாடக ஆபரணங்கள் :

கிரீடம் (ஆண், பெண் இருபாலார்க்கும் வெவ்வேறானவை) நாகாபரணம், உருத்திராட்சம், குண்டலங்கள், செவியணி, நெற்றிச் சின்னம், புல்லாக்குமாட்டல், அட்டிக்கை, தோளில் அணிகின்ற புஜ கங்கணம், கங்கணம், பொன் பூணூல், மார்புக் கவசங்கள், இடையாபரணம், (ஆண்களுக்குரியது) உடியாணம், சிவலிங்க ஆரம், கங்கண மோதிரம், கழல், தண்டை, சலங்கை, நீள்கழுத்து மாலை, ஆயுதங்கள் (வாள், வில், கத்தி, கேடயம், அம்பு, திரிசூலம்).

## 15. சதங்கைகள் :

நடனம் ஆடுபவரின் இரண்டு கால்களிலும் கட்டப்படும் குலுங்கும் சதங்கைகள் தாளக்கட்டிற்கு ஏற்ப ஒலி எழுப்பும். ஆடுபவருக்கும் காலப்பிரமாணத்தைக் கணக்கிடவும், கேட்பவரின் காதுக்கு இனிமையூட்டவும் உதவுபவை சதங்கைகளே. சதங்கையின்றி நாட்டியத்தைக் கற்பனை செய்ய இயலாது.

ஆடுபவரின் ஒவ்வொரு காலிலும் நூறு சதங்கைகள் கோர்த்த பட்டை கட்டப்பட்டிருக்கும். அவை வெண்கலத்தில் செய்யப்பட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு சிறு கிண்கிணிகளாகும். இனிய ஓசையை எழுப்பக் கூடிய இச்சதங்கைகள் ஒன்றுக்கொன்று ஒரு விரற் கண்ட இடை வெளிவிட்டு நீலப்பட்டையில் தைக்கப்பட்டிருக்கும்.

16. அலாரிப்பு :

இது இறை வணக்க நிகழ்ச்சியாகும். முரசுகளின் அதிபதியான விநாயகர், வானம், பூமி ஆகியவற்றை வணங்குதல் மரபு. இது சுத்த நிருத்தமாக, எந்தவித இசைப் பின்னணியோ, பாடல்களோ, அபிநயங்களோ இன்றி ஆடப்படும். தாளம் மட்டுமே, வாய் ஜதிகளாகவும், 'தாளம்' எனும் கருவியாலும் எழுப்பப்படும். அலாரிப்பினை பஞ்ச ஜாதிகளுக்கேற்பச் செய்யலாம். இதனால் அலாரிப்பு ஐந்து எண்ணிக்கையாகின்றது.

அவையாவன :

1. **சதுஸ்ர அலாரிப்பு** : இது ஆதி தாளத்தில் செய்யப்படும். இது நான்கு எண்ணிக்கையுடையது.

2. **திஸ்ர அலாரிப்பு** : இது திஸ்ர ஏக தாளம் அல்லது ரூபக தாளத்தில் செய்யப்படும். மூன்று எண்ணிக்கையுடையது.

3. **மிஸ்ர அலாரிப்பு** : இது மிஸ்ர சாபு அல்லது திஸ்ர ஜாதி திருபுடை தாளத்தில் செய்யத்தகுந்தது. ஏழு எண்ணிக்கையுடையது.

4. **கண்ட அலாரிப்பு** : இது ஐந்து எண்ணிக்கையுடையது. இது கண்ட சாபு தாளம் அல்லது ஜாதி ரூபக தாளத்தில் செய்ய ஏற்றது.

5. **சங்கீர்ண அலாரிப்பு** : இது சங்கீர்ண ஜாதி ஏக தாளத்தில் செய்ய ஏற்றது. மற்றும் கண்ட ஜாதி திருபுடைய தாளம், மிஸ்ர ஜாதி ரூபக தாளத்திலும் இதனைச் செய்யலாம். இது ஒன்பது எண்ணிக்கை உடையது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. புஷ்பாஞ்சலி :

கைகளில் மலரை ஏந்திக்கொண்டு கால்களில் அடவுகளை, அஃதாவது கடினமான பாத வேலைகளையும் அரங்கம் முழுவதும் சுற்றி வந்து செய்யக்கூடியதுமான நடனமே புஷ்பாஞ்சலியாகும். இதுவும் முதலில் ஆடப்படும் இறை வணக்க நிகழ்ச்சியே. தீமைகளை ஒழித்து, நல்லனகாத்து, ஆடுபவரை ஆதரித்து, ஆசிரியருக்குப் புகழ் சேர்த்து, ஆசி வழங்கும்படி இறைவனை வேண்டுதல். ஆடுபவர் "புஷ்ப" முத்திரையுடன் அபிநயிப்பார்.

## 18. ஜதீஸ்வரம் :

பரதநாட்டிய நிகழ்ச்சிகளில் ஆரம்ப நடனத்துக்கு அடுத்தபடியாகச் செய்யப்படுகின்ற நடனம் ஜதீஸ்வரம் என்பதாகும். தமிழிசையில் இது போன்றே சூலாதி, பிரபந்தங்கள் என்ற இரண்டு பிரிவுகள் உள்ளன. இவற்றையும் ஜதீஸ்வரம் என்றே சொல்லலாம். ஸ்வரங்களின் பின்னணியில் ஜதிகளைப் போன்று செய்யப்படுகின்ற சுத்த நிருத்தமே ஜதீஸ்வரம் எனப்படும். ஜதீஸ்வரங்கள் மூன்று முதல் நான்கு ஸ்வர அமைப்புகளை உடையதாக இருக்கும். பல்லவி, அனுபல்லவி, சரணம் போல மூன்று அமைப்புடன் இருக்கும். ஆனால் பாடல்கள் இருப்பதில்லை. பாடகர் ஒரே சீரான பல்லவி போன்ற ஸ்வரத்தினைப் பாடிக்கொண்டிருக்க அதன் பின்னணியில் பலவிதமான அடவுகள் நெருடலான கணக்குகளுடனும் பின்னிப் பிணைந்த அழகிய அசைவுகளுடனும் செய்யப்படுகின்றன. இதனையே ஜதீஸ்வரம் என்கிறோம்.

ஜதீஸ்வரங்கள் ஆதிதாளம், ரூபக தாளம் ஆகியவற்றிலேயே அதிகமாக இருக்கின்றன. திஸ்ரதிருபுடை, மிஸ்ர ஜெம்பை, கண்ட ஜாதி அடதாளம் போன்றவற்றிலும் ஜதீஸ்வரங்கள் உள்ளன.

## 19. சப்தம் :

சப்தம் என்றால் சொல் எனவும் தெய்வத்தைப் புகழ்ந்து பாடுதல் எனவும் பொருள்படும். இது நாட்டியக் கச்சேரி உருப்படி வகைகளிலே மூன்றாவதாக இடம் பெறும். முதன் முதலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிநயத்தை வெளிக் காட்டும் உருப்படியாகவும், கண்ணன், முருகன், இராமன் முதலான கடவுளர்கள் மேல் பாடப் பட்டவையாகவும் அமைகின்றது. சப்தங்கள் யாவும் காம்போதி இராகத்திலேயே பாடப்படுகின்றன. இவ் உருப்படி பெரும்பாலும் மிஸ்ர சாபு தாளத்தில் அமைந்துள்ளது.

சப்தம் என்னும் உருப்படி ஜதியுடன் ஆரம்பமாகும். இதனைத் தொடர்ந்து சாகித்தியமும் இடம் பெறும். சப்தம் என்னும் உருப்படி நிருத்திய உருப்படிக்கு எடுத்துக் காட்டாக அமைகின்றது. சாகித்தியத்திற்கு நேர் கைகளும், சஞ்சாரி பாவத்திற்குரிய கைகளும் அபிநயிக்கப்படுகின்றன. சப்தத்தின் இறுதியில் சாலமுரே அல்லது நமோஸ்துதே இடம் பெறும். திரு. க. பொன்னையாபிள்ளை, திரு. கு. வடிவேலு போன்றோர் சப்தத்தினை இயற்றியுள்ளனர்.

## 20. வர்ணம் :

வர்ணம் என்பதைப் பொதுவாக நிறம் என்கிறோம். இசையில் வர்ணம் என்பது இராக சாயலுடனும் தாளங்களின் நுட்பங்களுடனும் கூடிய ஒரு அமைப்பு எனலாம். வர்ணங்கள் நாட்டிய நிகழ்ச்சியில் நடனம் ஆடுபவரின் திறமையை வெளிப்படுத்தும் அளவு கோலாகும். நடன நிகழ்ச்சியில் விறுவிறுப்பூட்ட வர்ணத்தில் ஜதிகள் இடையிடையே சேர்க்கப்படும்.

## 21. பதங்கள் :

இது நாட்டியத்தின் பிற்பகுதியில் இடம் பெறும் நிகழ்ச்சி. அபிநயத்துக்கு முக்கிய இடமுண்டு. 'சவுக்க கால' த்தில் பாடப்படும். நாட்டிய லட்சணப்பாடல்கள், இலக்கியம், இதிகாசம், புராண நிகழ்ச்சிகள், சமூகப் பாடல்கள் கூடப் பதங்களாகவே கொள்ளப்படும். பதங்கள் வர்ணங்கள் இரண்டுமே நடனமணிகள் செய்கின்ற அழகிய முகபாவங்களை – நவரசங்களைப் பொறுத்தே சிறப்புப் பெறுகின்றன.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 22. தீபாஞ்சலி :

நடனம் ஆடுபவர்கள் தங்கள் இரண்டு கைகளிலும் விளக்கினை வைத்துக் கொண்டு பாடல்கள் அல்லது வாத்திய இசைக்கேற்ப ஆடுவது தீபாஞ்சலி என்பர். இது ஆலயங்களில் தீப பூசை நடைபெறும் காலங்களில் விசேடமாக நடைபெறும். சில கிராமங்களில் இது கிராமிய நாட்டியமாக கன்னிகை நடனம் என்று திருமணமாகாத கன்னியர்களினால் நடிக்கப் பெறுகின்றது. தீபாஞ்சலி நடனம், பாடல்களைப் பின்னணி இசையுடன் செய்யும் போதே அழகும் சிறப்பும் பெறுகின்றது.

## 23. தில்லானாக்கள் :

நாட்டிய நிகழ்ச்சியில் நடனமணிகளின் திறமை, உழைப்பு, வேகம், நளினம், தாள ஞானம் போன்றவை அனைத்தும் வர்ணத்திலும் தில்லானாவிலுமே தெரியவரும். தில்லானாக்கள் செய்யும் போது ஒவ்வொரு பாணியைப் பொறுத்து நடன அமைப்பு இருக்கும். தற்போது நாட்டிய ஆசிரியர்கள் தமது கற்பனை வளத்துக்கேற்பவும், புதிய புதிய உத்திகளுடன் நாட்டியத்தினை அமைக்கின்றனர். பொதுவாகத் தில்லானாக்களில் பின்வரும் அம்சங்கள் இருக்கும்.

1. தில்லானாக்களின் ஆரம்பம் நிலையான இடத்திலிருந்து நளினமான உடல் அசைவுகளுடன் திரிகாலம் செய்யப்படும். அவற்றை அலங்கார அசைவுகள் எனலாம்.
2. கட்டடவுகளுடன் கூடிய பாதவேலைகள் இரண்டாவதாகச் செய்யப்படும். இதில் ஆசிரியரின் கற்பனைத் திறமையும் தாள ஞானமும், நடனமணியின் லயஞானமும் வெளிப்படும்.
3. 'கத்' என்கின்ற அமைப்புடன் கூடிய பாதவேலைகள் மூன்றாவது பாகமாகச் செய்யப்படுகின்றது. இது தாளத்தில் அடைவுகளின் (தட்டடைவும், சிமிறடைவும் கூடியது) பின்னங்களால் செய்யப் படுகின்றது.
4. நான்காவதாகப் பல கோர்வைகள் செய்து காட்டப்படும். அழகிய நாட்டிய அசைவுகளும், அரங்கம் முழுவதும் நகர்ந்து செல்லக் கூடிய அசைவுகளை நடன மணிகள் செய்வார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலநாட்டிய ஆசிரியர்கள் கோர்வைகள் அனைத்தையுமே ஏகலயம் அல்லது சதுஸ்ர ஜாதியிலேயே செய்கின்றனர். ஆனால் தில்லானாக்களில் கோர்வைகள் ஒவ்வொன்றும் பஞ்ச ஜாதிகளைக் காட்டுவதாக அமைத்தல் நன்றாகும்.

5. தில்லானாக்களில் சரணங்கள் இரண்டும் பாடல் இயற்றியவரின் முத்திரையுடன் கூடிய பாடலும் இருக்கும். இவை நாட்டிய ஆசிரியரின் திறமையான நாட்டிய அமைப்பினாலும், நடன மணிகளின் வேகம், முகபாவத்தினாலும் சிறப்படைகின்றன.

## 24. மோகினி ஆட்டம் :

சதிர், கதகளி ஆகியவற்றின் செய்முறைகளின் சேர்க்கையின் காரணமாகப் பிறந்ததே மோகினி ஆட்டம். பாதங்களை அகட்டி வைத்துக் கதகளியில் ஆடப்படும் நிலைகளை இந்த நடனத்தில் காணலாம். பெண்களே கையாளும் மரபு கொண்டதால் சதிரைப் போலவே சிருங்காரத்தையும்,லாஸ்யத்தையும் முக்கிய அம்சங்களாக இந்த நடனம் கொண்டிருக்கும். சதிரில் பயன்படுத்தப்படும் ஜதீஸ்வரம், சப்தம், வர்ணம், பதம் போன்ற உருப்படிகளே மோகினி ஆட்டத்திலும் கையாளப்படும். இவை தவிர சதிரில் இன்று நடைமுறையில் இல்லாமற் போன சொற்கட்டு என்னும் உருப்படியும், மற்றும் பந்தாட்டம் போன்ற மிக நளினமான உருப்படியும் மோகினி ஆட்டத்தில் காணப்படும். நல்ல அடவுக் கோர்வைகளும், அபிநயமும், சமமாக இடம் பெற்றுச் சலிப்புத் தட்டாத அழகிய லாஸ்யம் இந்த மோகினி ஆட்டமாகும்.

## 25. கதக் :

இது வட இந்திய நடனமாகும். சுமார் ஆயிரம் ஆண்டுகளாகவே வட பாரதத்தில் இந்நடனம் ஆடப்பெற்று வந்துள்ளது எனலாம். ஆனால் அது கிராமிய நடனமாகவே, அந்தந்தப் பிராந்திய மக்களுக்கேற்ப இருந்து வந்துள்ளது. கதக்கின் உடையமைப்பு நீளமான காலங்கியும் பெரிய மேல் சட்டையும் ஆகும். பார்வதியிடம் நாட்டியம் பயின்ற பாணாசூரனுடைய மகள் உஷை அதனைக் கோபிகைகளுக்குக் கற்றுத்தர அவர்கள் ஆடிய ஆட்டமே கதக் என்பார்கள். கடிமான தபேலா போல்களுடனும் (தபேலா சொற்கள்),


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்ற நிலையிலும் இருந்த இடத்திலேயே பல சுற்றுக்களைச் செய்வதுமே கதக்கின் விஷேச பாணி எனலாம். கதக் நாட்டியத்தின் பாதவேலைகள் பரத நாட்டியத்தில் தட்டடவைப் போன்றது. ஆனால் தாளத்தில் நுட்பமான கணக்குகளுடன் செய்யப் படுகின்றது. கதக் நாட்டியம் பயில்பவர் களுக்குத் தாளத்தின் கணக்கு முறைகளும் கற்றுத்தரப்படும்.

## 26. பரத நாட்டியப் பாணிகள்

பரதநாட்டியம் பல்வேறு இடங்களில் கற்றுத்தரப்பட்டாலும் குரு அல்லது குருவின் குரு தாம் இந்தப் பாணியில் கற்றுத்தருகிறேன் என்று சொல்வதைக் கேட்கலாம். தமிழகத்தில் தஞ்சாவூர், பந்தனை நல்லூர், காஞ்சிபுரம் என்கின்ற மூன்று பாணிகள் உள்ளன. பந்தனை நல்லூரில் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களின் பாணியே மிகப்பழைமையானது என்பர். இவரது பாணி மிக எளிமையும் அழகிய சிற்ப நிலைகளைப் போன்று கரணங்களை அடிப்படையாகக் கொண்டது என்றும் கூறுவர்.

தஞ்சாவூர் பாணி என்பது வடிவேல் சின்னையா, பொன்னையா சகோதரர்களால் தோற்றுவிக்கப்பெற்றது. இவர்களே நாட்டிய பத்ததியைச் சீர்ப்படுத்தினார்கள். நாட்டியங்களுக்கெனப் பல பாடல்கள், ஜதீஸ்வரங்கள், ஜாவளிகள், பதவர்ணங்கள், தில்லானாக்கள் போன்றவற்றை இச் சகோதரர்களே எழுதினார்கள். தஞ்சாவூர் பாணி மிக எளிமையானதும் நுட்பமானதுமாகும்.

காஞ்சிபுரம் பாணி, காஞ்சிபுரம் கந்தப்பாபிள்ளை என்பவரின் முப்பாட்டனார்கள் பயிற்றுவித்த பாணியாகும். இப்பாணியினை நன்கு புகழ் மணக்கச் செய்தவர்கள் காஞ்சிபுரம் எல்லப்ப முதலியார், நயினாப்பிள்ளை ஆகியோராவர். காஞ்சிபுரம் பாணியில் 108 கரண நிலைகள் மிக விளக்கமான அளவிலும் ஏராளமான முத்திரை களுடனும் உபயோகப்படுத்தப்படுகின்றன.

## 27. ஜாவளி :

இது சிருங்கார இரசத்தையும் நாயக, நாயகி சகி பாவத்தையும் ஒரு சேர வெளிப்படுத்தும் உருப்படியாக அமைகிறது. இதன் அமைப்பு


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உற்சாகம் ஊட்டக் கூடியதாகவும் எளிதானதாகவும் விளங்கும். நடைமுறை மொழிநடையில் நாயக, நாயகி நியதிகளை விளக்கும் வகையில் இதன் சாகித்தியம் அமைந்திருக்கும். ஜாவளி பெரும்பாலும் மத்திம காலத்தில் அல்லது துரித காலத்தில் பாடப்படும். ஜாவளிகளில் மனிதர்களையும் தலைவனாகக் கொள்ளும் சிருங்காரத்திற்கே முக்கியத்துவம் அளிக்கப் பட்டிருக்கும்.

ஜாவளிகள் மனதைக் கவரும் இசையில் அமைந்திருப்பதால் எல்லோராலும் விரும்பப்படும். இவ்வுருப்படி நடன நிகழ்ச்சி நிரலில் கட்டாயமாகச் சேர்க்கப்பட வேண்டும். என்னும் நியதியில்லை. தர்மபுரி சுப்பராயர், பட்டாபிராமய்யர், சுவாதித்திருநாள் ராஜா போன்றோர் ஜாவளியை இயற்றியுள்ளோரில் சிலராவர்.

## 28. ஸ்லோகம் :

கவிதைகளை இராகமாக நீட்டிப் பாடுவது ஸ்லோகம் ஆகும். இது தாளத்திற்கமையாது இராகமாக நீட்டிப் பாடப்படும். கிருஷ்ணகானா மிருதம், திருவாசகம், பிள்ளைத் தமிழ் போன்ற தமிழ்ப் பாடல்களும் பாடப்பட்டு அபிநயிக்கப்படும். இது கடவுளின் பற்பல அற்புத லீலைகளைச் சித்திரிப்பதாக அமைக்கப் பட்டுள்ளன. நாட்டிய சம்பிரதாய உருப்படிகளில் இடம் பெறும் இறுதி நிகழ்ச்சி இதுவாகும்.

## 29. அஷ்டபதி :

அஷ்டபதி,கி.பி.17ஆம் நூற்றாண்டில் ஜெய தேவரால் எழுதப்பட்டது. இதனைக் கீத கோவிந்தம் என்பர். சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டது. இது முழுக்க முழுக்கக் கிருஷ்ணன். – ராதையின் சிருங்கார லீலைகள் பற்றியது. அஷ்டபதி எனப் பெயர் வரக் காரணம், இது எட்டுப் பத்திகளைக் கொண்டது. எந்தவொரு பத்தியிலும் நான்கு நான்கு வரிகள் இருக்கும். அஷ்டபதியில் 24 பாடல்களும் 12 உள் பிரிவுகளும் இருக்கிறது.

இது சிருங்கார ரஸத்தையே பிரதானமாகக் கொண்டது. இதன் வெளிப் பொருளாகச் சிற்றின்பமே தோற்றுகிறது. இதன் உட்பொருளை நோக்கின் கிருஷ்ணனைப் பரமாத்மா ஆகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதையை ஜீவாத்துமா ஆகவும் சகியை ஞான குருவாகவும் கொள்ளலாம். ஜீவாத்துமா பரமாத்மாவை அடைய முயலும் நிலையை இது விளக்கிக் காட்டுகிறது எனலாம். இவ்வுருப் படிகளுக்கு அனுபல்லவி கிடையாது.

## 30. சீர்காழி அருணாசலக்கவிராயர் :

'யாரோ இவர் யாரோ என்ன பேரோ அறியேனே'
எனத் தொடங்கும் இப்பாடல் தமிழிசை உலகில் மிகப் பிரபல்யமான ஒரு கீர்த்தனையாகும். இது போன்ற கருத்துச் செறிவும் கற்பனை வளமும் கொண்ட பல அற்புத இசை வடிவங்களால் இராமபிரானின் சரித்திரத்தை இசை நாடகமாக அளித்த பெருமைக்குரியவர் அருணாசலக் கவிராயராவார்.

தமிழிசைக்குரிய மூன்று உயிர் நாடிகளுள் சீர்காழிப்பதியில் பிறந்த மற்றொரு இசைப்புலவர் அருணாசலக்கவிராயர். இவர் சீர்காழி – ஆக்கூர் – திருக்கையூர் என்ற சாலையிலுள்ள 'தில்லையாடி' என்ற சிற்றூரில் கார்காத்த சைவவேளாள குலத்தில் பிறந்தார். பிறந்த ஆண்டு கி.பி.1711. இவருடைய தாய், தந்தையர் நல்லதம்பிப்பிள்ளை – வள்ளியம்மை என்போராவர். இவர்களுக்கு நான்காம் பிள்ளையாய்ப் பிறந்தவர் கவிராயர். இளமையிலேயே (12 வயதில்) பெற்றோர் காலஞ் செல்லவும் இவர் தன் தமையன்மார் பாதுகாவலிலே வளரலாயினர்.

தக்க முறையில் சிறிது காலம் கல்வி பயின்ற பின், மாயூரத்தை அடுத்த தருமபுரம் சென்று அங்கிருந்த சைவாதீனத்தைச் சேர்ந்த ஆதீனவித்துவான் அம்பலவாணக்கவிராயரிடம் சமயக் கல்வியும் பிறவும் பெற்றுவரலாயினர். வடமொழியும் அங்கே பயின்றார். தமது 18 வயதுவரை அங்கிருந்து சைவத் திருமுறைகளையும், தமிழ்ச் சாத்திரங்களையும், ஆகமங்களையும் கற்றார். இவருடைய அருங்குணங்களைக் கண்ட ஆதீனத்தலைவர் இவரைத் துறவு பூணச்செய்து அடுத்த ஆதீனத்தலைவராக்க எண்ணங்கொண்டார். ஆனால், அருணாசலக்கவிராயர் அதற்கு இணங்காமல் இசையிலும், தமிழிலும் நாட்டங் கொண்டார். தமது 30 வயதில் மணஞ்செய்தார். 25 வருடம் சீர்காழியில் வாழ்ந்தார். தமது 60ஆவது வயதில் 'இராமநாடகக் கீர்த்தனை' யைப் பாடி முடித்தார். பின்னர் ஏழு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளே வாழ்ந்தார். சீர்காழியில் சிதம்பரநாத முனிவர் தமக்கு அமைத்துக் கொடுத்த இல்லத்தில் வாழ்ந்து கி.பி. 1778ம் வருடம் ஆனி மாதம் காலமானார்.

**இலக்கியப் படைப்புக்கள் :**

தமிழிலக்கியப் பரப்பனைத்திற்கும், உரையாணி போன்ற கம்ப ராமாயணத்தை ஊன்றிப் படித்து அதில் திளைத்தவர் கவிராயர். பிரசங்கமும் செய்துவந்தார். அக்காலத்தில் வேங்கடராமையர், கோதண்டராமையர் என்ற இரு பிராமணர் இவரிடம் இராமாயண பாடம் கேட்டனர். இவருடைய புலமையையும் பெருமையையும் உணர்ந்து, தாங்கள் பயின்றுவரும் கம்பராமாயணத்தையே கீர்த்தனை உருவத்தில் இசைப்பாட்டாகப் பாடித் தரவேண்டு மென்று இவரை வேண்டிக் கொண்டார்கள்.

தமிழ்நாட்டின் கூத்திற்கும், நாடகத்திற்கும் ஏற்ற முறையிலே, இராம சரிதத்தை இசைப்பாட்டாக அமைக்கக் கவிராயருக்கு ஆசை இருந்தது. இசைத்தேர்ச்சி பெற்ற மாணவர் வேண்டுகோள் இவருக்கு ஊக்கமளித்தது. நூலை ஒருவகையாக முடித்த கவிராயர், கம்பரைப் போலவே 'ஸ்ரீரங்கத்தில்' அரங்கேற்ற எண்ணினார். வைணவர்கள் அதை மறுத்தனர். வருந்திய கவிராயர், திருவரங்கநாதரைக் கீர்த்தனம் பாடித் துதித்தார்.

ராகம் : மோகனம் ஆதிதாளம்

பல்லவி

ஏன்பள்ளி கொண்டீரையா – ஸ்ரீரங்கநாதரேநீர்
ஏன்பள்ளி கொண்டீரையா

இக்கீர்த்தனம் ஸ்ரீரங்கநாதர்மீது பாடப்பட்டிருந்த போதிலும் இதனுள் பயின்று வருவது 'இராமசரிதம்' தான்.

**இராமநாடகக் கீர்த்தனை :**

பாமர மக்கள் பார்த்தும் கேட்டும் அனுபவிப்பதற்கென்று எழுதப்பட்ட முதல் நூல் இராமநாடகக் கீர்த்தனைநூல். இதனுள் இசைப் பகுதிகள் 258. தரு என்ற கீர்த்தனம் 197. திபதை 60. (இரண்டு அடிக்கண்ணிகளாய் மட்டும் ஆன இசைப்பாட்டு) தோடயம் 1 (கடவுள் வணக்கம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணாசலக்கவிராயர் இந்நூலில் 40 ராகங்களைப் பயன் படுத்தியுள்ளார். அவற்றுள் அசாவேரி, கல்யாணி, சாவேரி, தோடி, மத்தியமாவதி, மோகனம் ஆகியவை 15 முதல் 20 தடவைகள் வரை வருகின்றன. ஆனந்தபைரவி, சங்கராபரணம், சௌராஷ்டிரம், பைரவி, புன்னாகவராளி 11, 13 தடவைகள். கமாஸ், காபி, சயிந்தவி, நாட்டக்குறிஞ்சி, பரசு, பிலகரி, மங்கள கௌசீகம், நாட்டை ராகங்களில் ஒவ்வொரு பாடலே.

ஆதி தாளத்தில் 146 பாடல்கள். பல பாடல்கள் பொது மக்களிடையே நன்கு பழக்கமாகியுள்ளது.

தமிழிசை உலகில் கீர்த்தனை நாடகங்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்து கீர்த்தனை, தரு, திபதை முதலான இசை உருப்படிகளை அறிமுகப்படுத்தித் தமிழில் எழுதப்பெற்ற முதல் இசைநாடகம் இராமநாடகக் கீர்த்தனையேயாகும். தென்னக இசைவரலாற்றில் கீர்த்தனை என்னும் பெயரில் ஒரு கதையை இசைநாடகமாகப் படைத்துப் புதுமை நிகழ்த்திய பெருமை இவரையே சாரும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி : IV

## வயலின்


இசைக் கருவிகளில் ஒன்று வயலின். இது ஹிந்துஸ்தானி சங்கீதத்திலும் ஒரு பிரதான வாத்தியமாகத் திகழ்கிறது. இதைப் பிடில் என்றும் சொல்லுவர். இது ஐரோப்பிய வாத்தியமாயினும் இன்று இந்திய இசைக்குச் சிறந்த துணைக்கருவியாக விளங்குகின்றது. குறிப்பாகக் கர்நாடக சங்கீதக் கச்சேரிகளில் இதைத் தனியாகவும் துணைக் கருவியாகவும் சிறப்பாகப் பயன்படுத்துகிறார்கள். சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் மேனாட்டிலிருந்து இவ்வாத்தியம் கர்நாடக சங்கீத வித்துவான்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் சிறப்பியல்புகளை நன்குணர்ந்து இந்திய சங்கீத வித்துவான்கள் வயலின் வாத்தியத்தை ஏற்றுக் கொண்டனர். இராமசாமி தீட்சிதரின் புதல்வரான பாலஸ்வாமி தீட்சிதர் முதன்முதலாக இவ்வாத்தியத்தை இசைப்பதில் தேர்ச்சி பெற்றார். கர்நாடக இசைக்கேற்ப ஸ - ப - ஸ - ப என்ற வகையில் சுருதிகூட்டிச் சிறப்பாக வாசித்துக் காட்டினார். வயலின் வாத்தியத்தில் உள்ள சிறப்பான அம்சங்கள் வருமாறு :

1. சுயம்பு ஸ்வரங்களுடன் கூடிய அதன் கணிசமான நாதம்.
2. வில் போட்டு வாசிக்கப்படுவதனால் அதிலிருந்து எழும் கார்வையான நாதம்.
3. ஆடவர் குரலிற்கும் பெண்களின் குரலிற்கும் ஏற்றவாறு சுருதி கூட்டி வாசிப்பதற்கான வசதி.
4. வெவ்வேறு இடங்களுக்கு இலகுவில் எடுத்துச் செல்லலாம்.
5. மிகத் துரித காலங்களிலும் வாசிக்கலாம்.
6. எளிதாக ஸ்ருதி சேர்க்கக் கூடியது.
7. ஒலியின் கனத்தினை (Volume control) வில்லிலேயே சரி செய்து கொள்ளலாம்.
8. கனநய பாவங்களை வாசித்துக் காட்ட வசதியுண்டு. கற்றுக் கொள்ள மிக எளிதான வாத்தியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வயலினின் பாகங்கள்**

வயலினை ஒரே மரத்தில் செய்வதாகச் சிலர் நினைக்கின்றனர். வயலினின் பல்வேறு பாகங்கள் பல்வேறு மரங்களிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. என்பதே உண்மை. வயலின் மிகவும் எடை குறைந்த இசைக்கருவி. ஆனால் அதன் ஒவ்வொரு சிறிய பாகங்களும் உறுதியானதாயும் அதே சமயம் எடை குறைவானதாயும் இருப்பதற்காகவே ஒவ்வொரு பாகங்களும் வெவ்வேறு மரங்களில் செய்யப்படுகின்றன.




| | | | |
|---|---|---|---|
| 1. | அலங்காரச்சுருள் | 7. | தந்திப்பிடிமானி |
| 2. | பிரடைகள் | 8. | தந்திப் பிடிமானியின் முனை |
| 3. | பின்கழுத்து | 9. | ஒலியதிர்வுத்துளை |
| 4. | பிரடை விதானம் | 10. | மேற்பலகை |
| 5. | விரல் பலகை | 11. | மேற்புறவளைவு |
| 6. | தந்திகள் | 12. | நாதத்தூண் |


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

13. உலோகத் திருகாணி
14. குதிரை அல்லது பால மெட்டு
15. உட்குவிந்த வளைவு
16. கீழ்ப்புற வளைவு
17. தந்திமேரு

வயலினின் உடலானது மேற்பலகை, பின்பலகை, ஆறு விலாப் பலகைகளினால் இணைக்கப்பட்டுள்ளது.

வயலினின் பாகங்கள் வருமாறு :

| | |
|---|---|
| 1. அலங்காரச்சுருள் | (Scroll) |
| 2. பிரடைகள் | (Pegs) |
| 3. பின்கழுத்து | (Back neck) |
| 4. பிரடை விதானம் | (Peg ceiling) |
| 5. விரல் பலகை | (Finger board) |
| 6. தந்திகள் | (Strings) |
| 7. தந்திப்பிடிமானி | (Tail piece) |
| 8. தந்திப் பிடிமானியின் முனை | (String holder plug) (முடிவு முறை) |
| 9. ஒலியதிர்வுத்துளை | (Vibration hole) |
| 10. மேற்பலகை | (Top plank) |
| 11. மேற்புறவளைவு | (Upper bouts) |
| 12. நாதத்தூண் | (Sound pole) (ஒலியதிர்வுத்தூண்) |
| 13. உலோகத் திருகாணி | (String adjuster) (தந்திநிலையாக்கி) |
| 14. குதிரை அல்லது பால மெட்டு | (Bridge) |
| 15. உட்குவிந்த வளைவு | (Middle bouts) |
| 16. கீழ்ப்புற வளைவு | (Lower bouts) |
| 17. தந்திமேரு | (End) |

மேற்படி பாகங்கள் யாவுமே தனித்தனியான மரங்களிலேயே செய்யப்படுகின்றன. தந்தியும் உலோகத்திருகாணியும் மட்டுமே உலோகத்தால் ஆனவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அலங்காரச்சுருள் :**

ஸ்க்ரோல் (Scroll) என ஆங்கிலத்தில் வழங்கப்படும் இது அலங்காரத்திற்காகவே இருந்தாலும் இன்று கர்நாடக இசை வயலின் கலைஞர்களுக்கு காலில் (குதிகாலின் பக்கவாட்டுப் பகுதியில்) வைத்து வாசிக்க மிக வசதியாக உள்ளது. இந்த அலங்காரச்சுருள் ஸைக்கமோர், ஜாதிக்காய் மரம், சிவப்பு நிறம் கொண்ட சில்வர் மரம் (Red Silver Wood) பைன், எபோனி போன்றவற்றில் தயாரிக்கப் படுகிறது. இந்த அலங்காரச் சுருளின் தொடர்ச்சியாக உள்ளது பிரடை விதானமும் பிரடைகளுமாகும்.

**பிரடைகள் :**

கருங்காலி மரத்தால் செய்யப்படுவதும் தந்தியைத் தாங்கிப் பிடிப்பதுமான பிரடைகள், நீண்ட உருண்ட குச்சியின் முனையில் விரலால் பிடித்துத் திருகுவதற்கு ஏற்ற வகையில் அமைக்கப் பட்டுள்ளன. இது போன்ற பிரடைகள் இன்று கிட்டார், மாண்டலின் போன்ற வாத்தியங்களில் உள்ளன.

**பின்கழுத்து :**

தண்டியைப் போன்ற அமைப்புடைய இந்தப் பின்கழுத்தின் மரச்சட்டம் அலங்காரச் சுருளிலிருந்து நீண்டுவந்த ஒரே மரச்சட்டமாகும். பிரடை விதானத்தில் குடைந்தெடுக்கப்பட்டும் பின்கழுத்துப் புறத்தில் கீழ்ப்புறம் உருட்டப்பட்டும் அமையப் பெற்றது.

**பிரடை விதானம் :**

இது பின்கழுத்துக்கும் அலங்காரச் சுருளுக்கும் மத்தியில் அமையப் பெற்ற சிறிய பெட்டி போன்ற ஓர் அமைப்பு. இதில் நான்கு பிரடைகள் குறுக்காகப் பக்கத்திற்கு இரண்டாகச் செருகப்பட்டுத் தந்தியை இழுத்துப் பிடிக்கிறது.

**விரல் பலகை :**

கருங்காலி மரத்தாலான வழவழப்பான சுமார் 26 ½ செ.மீ. நீளமும் ஒரு புறம் 2 ½ செ.மீ. அகலமும் உடைய இந்தப் பலகை சுருள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகையுடன் கூடிய பின்புறத் தண்டுமீது ஒட்டப்பட்டுள்ளது. இதன் மேற்புறம் சிறிதே வளைவாக இருக்கும். இது சுமார் 14 செ.மீ வரை தண்டு மீது ஒட்டப்பட்டும் மீதமுள்ள $12\frac{1}{2}$ செ.மீ. பாகம் உடல் பாகத்தில் படாதவாறு சுமார் ஒரு சுண்டு விரலளவு (1 செ.மீ. வரை) உயர்ந்த நிலையில் இருக்கும். இந்த விரல் பலகை உடல் பாகத்தைத் தொடாதவாறு இருத்தல் மிக முக்கியமானது.

**தந்திகள் :**

வயலினில் நான்கு தந்திகள் உள்ளன. இவற்றை வில்லைப் போடும் பக்கத்திலிருந்து 1, 2, 3, 4 என வழக்கத்தில் வரிசைப் படுத்துகின்றனர். முதல் தந்தி மிகவும் மெல்லியதாக உள்ளது. இதனை E என்று குறிப்பிடுவர். இரண்டாம் தந்தி சிறிது பருமனாகவும் மூன்றாம் நான்காம் தந்திகள் முறையே சிறிது சிறிது அதிக பருமனாகவும் உள்ளன. இரண்டாம் தந்தி A என்றும் மூன்றாம் தந்தி D என்றும் நான்காம் தந்தி G என்றும் வழங்கப்படுகிறது.

நான்கு தந்திகளும் நான்கு பிரடைகளிலும் இணைக்கப்பட்டு விரல் பலகையின் மேலாகவும் குதிரை (பாலமெட்டு)யின் மேலாகவும் சென்று தந்தி தாங்கியுடன் கட்டப்பட்டுள்ளன. தந்தி தாங்கி வயலினின் மேற் புறத்திலுள்ள பொத்தானுடன் பிணைக்கப் பட்டுள்ளது. விரல் பலகைக்கும் குதிரைக்கும் இடையில் உள்ள இடமே தந்திகளின் மேல் வில் போட்டு ஒலியை எழுப்பும் பகுதியாகும். வில் போடுவதற்கு வலதுகை உபயோகமாகின்றது. வில் போடும் போது இடக்கை விரல்களை ஸ்வரஸ்தானப் பலகையின் மேல் தந்திகளின் மீது உரிய உரிய ஸ்தானங்களில் வைத்துத் தேவையான ஸ்வரங்கள் உண்டாக்கப்படுகின்றன.

வயலினில் சுருதி சேர்க்கும் முறை :


| | |
|---|---|
| முதல் தந்தி | மத்தியஸ்தாயி பஞ்சமம் (E) |
| இரண்டாம் தந்தி | மத்தியஸ்தாயி ஸட்ஜம் (A) |
| மூன்றாம் தந்தி | மந்திரஸ்தாயி பஞ்சமம் (D) |
| நான்காம் தந்தி | மந்திரஸ்தாயி ஸட்ஜம் (G) |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயலினில் மேற்கண்டவாறு ஸ்ருதி சேர்க்கப்படும். இதில் 3½ ஸ்தாயி முதல் 4 ஸ்தாயி வரை வாசிக்க இயலும். இவ்வாத்தியத்தில் ஸ்வர வில், சாகித்திய வில் என இருவகை வில் போடப்படுகிறது. எளிதாக ஸ்ருதி சேர்க்கக் கூடிய வாத்தியமாகும். பழுதுகள் அதிகமாகத் தோன்ற வாய்ப்பில்லாத வாத்தியமாகவும் இது விளங்குகின்றது.

தஞ்சை வடிவேற்பிள்ளை, புதுக்கோட்டை நாராயணஸ்வாமி ஐயர், திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யர், பிடில் வெங்கோபராவ், திருச்சி கோவிந்தசாமிப்பிள்ளை, செம்மங்குடி நாராயணஐயர், லால்குடி ஜயராமன், குன்னக்குடி வைத்தியநாதன் போன்றோர் வயலின் வாசித்துப் புகழ் பெற்ற கலைஞர்களில் குறிப்பிடத்தக்கோராவர்.

**மிருதங்கம்**




| | | | |
|---|---|---|---|
| 1. | மரத்திலான உடற்பாகம் | 6. | சாப்புத்தோல் |
| 2. | வார் | 7. | தாங்கித்தோல் |
| 3. | பின்னப்பட்ட மூட்டுத்தோல் | 8. | இடப்புறமூட்டு |
| 4. | மீட்டுத்தோல் | 9. | இடப்புற உள்தோல் |
| 5. | நாதச்சுண்ணம் | 10. | புள் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளவாத்தியக் கருவிகளுள் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது மிருதங்கமாகும். தோற்கருவிகளில் இதுவுமொன்று. இசைக் கச்சேரிகள், நிருத்திய நாடகங்கள், நாட்டியக் கச்சேரிகள், கதாகாலட்சேபங்கள், பண்ணிசைக் கச்சேரிகள் அனைத்திலும் இன்றியமையாத வாத்தியமாக மிருதங்கம் பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாத்தியம் தண்ணுமை, ஆனந்தவாத்தியம், நந்திவாத்தியம், நான்முகன் மத்தளம் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. பண்டைக்காலத்தில் முட்டு, முழவு எனவும் அழைத்தனர்.

இவ்வாத்தியம் மரத்தினாலாய கட்டையின் இரு பக்கங்களிலும் தோலினாலாய இரு மூட்டுக்களையும் வாரின் துணையாகப் பொருத்தப்பட்டு அமைந்த கருவியாகும். இதற்கு வலந்தரை இடந்தரை என இரு பகுதிகளுண்டு. வலந்தரைப் பகுதி மூட்டு எனப் பெயர் கொண்டது. இப்பகுதி மூன்று தோல்களையுடையது. இதன் நடுப்பகுதியில் சாதம் எனப்படும் கருமை நிறமான பசை பூசப்பட்டிருக்கும். இப்பகுதியிலேயே மீட்டு சாப்பு என்னும் இனிய நாதம் உண்டாகிறது. இப்பகுதி வலது கையினால் வாசிக்கும் மரபுக்கமைய வலந்தரை என அழைக்கப்படுகிறது. மறுபக்கமுள்ள இடந்தரை யானது தொப்பி என அழைக்கப்படும். இதிற் காணப்படும் தொப்பித் தோலின் நடுப் பாகத்திலே கோதுமை றவையை நீருடன் கலந்து பிசைந்து வேண்டிய அளவிற்குப் பூசுவார்கள். பசை வைக்கப்பட்ட இத்தோலின் மீது இடது கையினால் தட்டும் போது 'தோம்' என்னும் இனிமையான நாதம் உண்டாகும். பாடுபவர்களுக்குச் சுருதி சம்பந்தமாகத் தம்புரா உதவுவதுபோல மிருதங்கம் லய சம்பந்தமான, காலப்பிரமாணம், எடுப்பு என்பவற்றை நிர்ணயித்துக் காண்பித்து உதவுகிறது. மிருதங்கம் பக்க வாத்தியமாக மட்டுமல்லாது தனிக் கச்சேரியாகவும் வாசிக்கப்படுகின்றது.

**மிருதங்கத்தின் அமைப்பு :**

மிருத் என்பது மண்ணாகும். பண்டைக் காலத்தில் மண்ணினாலேயே மிருதங்கம் செய்யப்பட்டது என்பர். பிற்காலத்தில் மண்ணிற்குப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலாகப் பலா, வேம்பு, செம்மரம், நுணாமரம் போன்ற மரங்களால் செய்யப்பட்டது. தற்காலத்தில் பலாமரம் அல்லது கருங்காலி மரம் பயன்படுத்தப்படுகிறது. இக்கருவியின் நீளம் சுமார் 2 அடி. இடப்பக்கம் சுமார் 8 அங்குலமும் வலப்பக்கம் 7 அங்குலமும் விட்டத்தைக் கொண்டிருக்கும்.

முதலில் மிருதங்கம் செய்யவுள்ள மரத்துண்டை எடுத்து உருளை வடிவமாக்குவர். பின் அதனைக் கடைச்சல் பட்டறையில் உள்ள இயந்திரத்தில் கொடுத்து மிருதங்க வடிவமாக்குவர். பின்னர் அதன் உட்பாகத்தைக் கடைந்து எடுப்பர். நடுப்பாகம் சிறிது கனமாகவும் ஓரப் பாகங்கள் சற்று லேசாகவும் செய்யப்படும். ஓரப் பாகங்கள் சுமார் 1.25 செ.மீ. ( $^1/_2$" ) கனத்தில் இருக்கும்.

**வலந்தரை மூட்டு :**

இதில் வெட்டுத்தட்டு, கொட்டுத்தட்டு, உட்காரத்தட்டு என மூன்று வட்டத்தோல்கள் பொருத்தப்பட்டிருக்கும். வலந்தலையின் ஓரத்தில் உள்ள தோலுக்கு மீட்டுத்தோல் (வெட்டுத்தட்டு) என்று பெயர். இது பசுக்கன்றின் தோலினால் செய்யப்பட்டுள்ளது. இதை அடுத்துள்ள தோலுக்கு சாப்புத் (கொட்டுத்தட்டு) தோல் என்று பெயர். ஆட்டின் தோல் இதற்கு உபயோகிக்கப்படும். மூன்றாவதாகவுள்ள பகுதி உட்காரத்தட்டாகும். இதை மூடிக் கறுப்பு நிறமான மருந்து (சோறு) பூசப்படுவதால் இதைக் கண்ணால் காணமுடியாது. இதனைக் கரணை என்பர். இக்கரணையிற்றான் மிருதங்கம் இனிமையான நாதத்தை அளிக்கிறது. சாப்பு என்றும் இதனை அழைப்பர். இந்த மூட்டானது 48 சாட்டை வார்க்கண்களையும் பின்னலில் வார் கோர்க்கப்படுகின்ற 16 கண்களையும் கொண்டது.

வெட்டுத்தட்டானது வார்ப்பின்னலின் ஓரமாக உட்பக்கத்தே சுற்றிவர 2 அங்குல அகலமுடைய வளையம் போன்றதாக இருக்கும். இது மீட்டு என்று அழைக்கப்படும். கொட்டுத்தட்டு கட்டையின் வாய்ப்பகுதி முழுவதையும் மூடும்படியாக இருக்கும். இதன் மேற்புறத்தே நடுப் பாகத்தில் 3 அங்குல விட்டமுள்ள அளவிற்கு வட்ட வடிவமான பகுதிக்குக் கருமைநிறமான சாதம் (கரணை) எனப்படும் பசை பூசப்பட்டிருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்காரத் தட்டானது கட்டையின் வாய் விளிம்புடன் பொருந்தி இருக்கும். இது வெளியே தோற்றப்படாது. இது சாட்டை வார்ப் பின்னலிலிருந்து ஒரு அங்குல அளவினது. இதன் முக்கிய தொழில் மற்றைய இரு தட்டுக்களையும் கட்டையுடன் ஒன்றவிடாமல் அவைகள் அதிர்வு பெற உதவுதலாகும்.

**இடந்தரை மூட்டு :**

இது இடது பாகத்தே பொருத்தப்பட்டிருப்பதால் இப்பெயர் பெறுகிறது. இதனை கவணை. தொப்பி என்றும் அழைப்பர். இதில் மூன்று தோல்கள் பொருத்தப்பட்டுள்ளன. வலந்தரையினைப் போலவே வெட்டுத் தட்டுக்கள் இரண்டையும், உட்பாகத்தே பசுக்கன்றுத் தோலினாலான தொப்பித் தோலினையும் உடையது. இத் தொப்பித் தோலின் நடுவே கோதுமை றவையை நீருடன் சேர்த்துப் பிசைந்து வேண்டிய அளவிற்கு அப்புவார்கள். இது மதுரமான இசை ஒலி எழுப்புவதற்குப் பெரிதும் துணை செய்கிறது. நிகழ்ச்சி முடிந்ததும் இதனைச் சுரண்டி எடுத்து விடுவர். தொப்பிக்கு 'நங்கி' என்ற பெயருமுண்டு.

**கட்டை :**

கட்டையானது சந்தனம், பலா, கொண்டல், அகில், வேம்பு, தென்னை, மாவிலங்கை ஆதியாம் மரங்களில் செய்யப்படுகிறது. கட்டை ஆக்கப்படும் அளவு பிரமாணங்களுக்கு ஏற்ப அதன் சுருதி தங்கியிருக்கும். மிருதங்கத்தில் இருவகையுண்டு. ஆண்களின் சுருதிக்குரிய (1 – $2\frac{1}{2}$ கட்டை) மிருதங்கம் தக்கு சுருதி மிருதங்கம் என்றும், பெண்களின் சுருதிக்குரிய (4 – $5\frac{1}{2}$ கட்டை) மிருதங்கம் ஹெச்சு சுருதி மிருதங்கம் என்றும் அழைக்கப்படும்.

மிருதங்கத்தின் நாதம் தீர்க்கமான கார்வை உடையதாக அமைவது கட்டையின் அமைப்பிலேயே பெரிதும் தங்கியுள்ளது. கட்டையின் நடுப்பாகம் வயிற்றைப் போல பருத்துக் காணப்படுவதால் தொந்தி என்றும் அழைக்கப்படுகிறது. இதனை 'அரடா' என்றும் கூறுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வார் (நாடா):**

மிருதங்கத்தில் கட்டையுடன் மூட்டினையும் தொப்பியையும் இணைப்பதற்கு வார் பயன்படுகிறது. இது எருமைத் தோலினால் ஆனது. சுருதியின் ஏற்ற இறக்கமானது வாரின் இறுக்கத்தில் தங்கியுள்ளது.

**கரணையிடல் :**

தோல் வாத்தியங்களுள் முதன்மை பெற்றது மிருதங்கமாகும். மற்றெக்கருவிக்கும் இல்லாத இனிமையான நாதம் கரணையின் தன்மையாலேயே ஏற்படுகின்றது.

கிட்டான் என்று சொல்லப்படும் ஒருவித கல்லைப் பொடிசெய்து சாதத்துடன் கலந்து பிசைந்து மென்மையாக்கி, கட்டையில் பொருத்தப்பட்ட மூட்டின் கொட்டுத்தட்டின் மேற்பரப்பின் நடுப் பாகத்தில் 3 அங்குல விட்டமுள்ள வட்ட அளவிற்குப் பூசப்படும். பின் கட்டை விரலினால் அழுத்தித் தேய்க்க வேண்டும். மேலும் மேலும் இப்படியே சிறிது சிறிதாகச் சாதத்தினை ஏற்றி இடையிடையே வழுவழுப்பான கூழான் கல்லினால் ஏற்றிய சாதத்தினைச் சூடேற்றும் வண்ணம் தேய்க்க வேண்டும்.

**சுருதி சேர்க்கும் முறை :**

மிருதங்கத்தைச் சுருதி சேர்க்கும் போது வலந்தலையைப் பாடுபவரின் ஆதார ஸட்ஜத்தின் நாதத்துக்குச் சமனாகச் சேர்த்துக் கொள்வர். இடந்தலையை மந்திரஸ்தாயி பஞ்சமத்திற்கு அல்லது மந்தரஸ்தாயி ஸட்ஜத்திற்குச் சேர்த்துக் கொள்வர்.

மிருதங்கம் வாசிப்பதற்கு உள்ளங்கைகளும் மணிக்கட்டுகளும் விரல்களும் உபயோகிக்கப்படும். மிருதங்கத்தின் சிறப்புக்கருதி பிரதான தாளவாத்தியமாக இதனைப் பயன்படுத்துகின்றனர். மிருதங்கத்தைத் திறமையாகக் கையாண்டவர்களில் நாராயண சாமி அப்பா, துகாராம் சுவாமி, சாமிநாதபிள்ளை, அழக நம்பிப் பிள்ளை, தட்சணாமூர்த்தி ஆசாரியார், பாலக்காடு மணிஐயர் ஆகியோர் குறிப்பிடத்தக்கோராவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி : V

## பரதக் கலை வளர்ச்சிக்குத் தொண்டாற்றியோர் :

1. **இ. கிருஷ்ணஐயர் :**

இருபதாம் நூற்றாண்டில் பரதக் கலை வளர்ச்சிக்கும் மறுமலர்ச்சிக்கும் பெருந்தொண்டாற்றியவர்களில் கிருஷ்ணஐயர் குறிப்பிடத்தக்கவர். இவர் பிரபல சட்டத்தரணியாக விளங்கிய போதிலும் பரதக்கலை வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்துத் தொண்டாற்றினார். புனிதமான பரதக்கலை மீண்டும் மறுமலர்ச்சி பெறவேண்டுமெனவும் ஆலயங்களில் அவை சிறப்பிடம் பெறவேண்டுமெனவும் விரும்பினார்.

1932, 1933ஆம் ஆண்டுகளில் கிருஷ்ண ஐயருக்கும் நடனத்திற்கு எதிரானோருக்குமிடையே பல விவாதங்கள் இடம் பெற்றன. பாலசரஸ்வதி, வரலட்சுமி, பானுமதி போன்ற பிரபல நாட்டியத் தாரகைகள் மூலம் வட நாட்டிலும் நாட்டியக் கலையின் அருமையினை புலப்படுத்தினார். காசியில் 1934இல் நடைபெற்ற அகில இந்திய மாநாடொன்றில் பரத நாட்டிய நிகழ்ச்சி ஒன்றினை நடாத்த ஏற்பாடு செய்தார். இவற்றோடு மட்டும் நின்று விடாது பத்திரிகைகளில் பரத நாட்டியக் கலையின் சிறப்பினை விளக்கும் கட்டுரைகள் பலவற்றை எழுதினார். இவற்றைப் படித்த கற்றசமூகத்தினர் பலர் தங்கள் பிள்ளைகளுக்குப் பரத நாட்டியம் கற்பிக்க முன்வந்தனர்.

கிருஷ்ண ஐயரின் முயற்சியினால் பல இடங்களிலும் பரதக் கலை வகுப்புக்கள் தோன்றின. இன்று உலகெல்லாம் பரதக் கலை பயிற்றப் படுகின்றது. இதற்குக் கால்கோளிட்ட பெருமை கிருஷ்ண ஐயரையே சாரும் என்றாலது மிகையல்ல. தமது பேச்சாலும், எழுத்தாலும், தொண்டாலும் பரதக் கலை மறுமலர்ச்சிக்குதவிய கிருஷ்ண ஐயரை நாட்டிய உலகு என்றும் நினைவு கூரும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. **திருமதி. ருக்மணிதேவி அருண்டேல் :**

பாரத நாட்டில் பரதக் கலை வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றியவர்களுள் திருமதி ருக்மணிதேவி அருண்டேல் குறிப்பிடத்தக்கவர். பெண்கள் நடனமாடுதல் இழிவானதெனக் கருதப்பட்ட ஒரு கால கட்டத்தில் பிராமணகுலப் பெண்ணான இவர் மயிலாப்பூர் கெளரி அம்மாளிடமும் பந்தனை நல்லூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடமும் பரதக் கலையைக் கற்றுத் தேறினார்.



1935ஆம் ஆண்டில் நிகழ்ந்த பிரம்ம ஞானசபையின் வைரவிழாக் கொண்டாட்டத்தின் போது இவரது அரங்கேற்றம் இடம் பெற்றது. தமது நடன நிகழ்ச்சிகளுக்குச் சதிர்க்கச்சேரி எனப் பெயர் சூட்டாது பரத நாட்டியக் கச்சேரி என்றே பெயரிட்டு அழைத்தார்.

பரத நாட்டிய நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்தும் ஆடை, அணிகளை இவரே வடிவமைத்துக் கொண்டார். சிற்ப ஓவியங்களையும் கலை வடிவங்களையும் பார்வையிட்டுக் கலை அம்சம் மிளிரும் படியான ஆடைகளைச் சிறப்புற அமைத்தார். முகபாவங்களை லோகதர்மியாகப் பிரதிபலிக்காது நாட்டிய தர்மியாகச் செய்ய வேண்டுமெனத் தீர்மானித்துத் தாமே அவற்றை மேடைகளிலும் ஆடிக் காட்டினார்.

1936இல் அடையாறில் கலாசேத்திரம் என்னும் கவின் கலை நிறுவனத்தைத் தாபித்தார். இந் நிறுவனத்தில் நடனக் கலைகளைப் பயின்றோர் இன்று உலகெல்லாம் பரதக் கலையை வளர்த்து வருகின்றனர். கலாசேத்திரம் உள்ளவரை பரதக் கலைமாமணி திருமதி ருக்மணிதேவி அருண்டேலின் நாமம் நிலைத்து நிற்கும் என்பது திண்ணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **'பத்மபூஷண்' திருமதி. பால சரஸ்வதி :**

பரதக் கலை வளர்ச்சிக்காக அருந்தொண்டாற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவர் 'பத்மபூஷண்', அபிநயஅரசி பால சரஸ்வதி ஆவார். இவர் தமது பாட்டி வீணா தனம்மாள், தாயார் ஜயம்மாள், தந்தை கோவிந்தராஜலு ஆகியோரின் அரவணைப்பில் இசை, நாட்டியம் என்னும் இருதுறைகளிலும் சிறந்து விளங்கினார். ஸ்ரீகந்தப்பர் நட்டுவனாரைக் குருவாகக் கொண்டு பரதக் கலை பயின்றார். காலையில் குருவிடம் நாட்டியம் பயின்ற பாலசரஸ்வதி மாலையில் தமது தாயாரிடம் இசை பயின்றார்.



பால சரஸ்வதியின் நாட்டிய அரங்கேற்றம் அவரது ஏழாவது வயதில் காஞ்சி காமாட்சியம்மன் ஆலயத்தில் நடைபெற்றது. நாட்டியக் கலையில் மட்டுமன்றி இசைத்துறையிலும் புகழ் பெற்று விளங்கிய பால சரஸ்வதியின் நாட்டியக் கச்சேரிகளைப் பெருந்திரளான இரசிகர்கள் கண்டுகளித்தனர். 'அபிநய அரசி' என அவரைப் பாராட்டினர். தமிழகத்தில் மட்டுமன்றி வட நாட்டிலும், வெளிநாடுகள் சிலவற்றிலும் இவரது நாட்டியக் கச்சேரிகள் இடம் பெற்றன. இவரிடம் நடனம் கற்ற மாணவர்கள் இன்று உலகின் பலபாகங்களிலும் உள்ளனர். சென்னை சங்கீத வித்வசபை, சென்னை தமிழிசைச் சங்கம் என்பன இவரைப் பலமுறை அழைத்துக் கௌரவித்துள்ளன. இந்திய அரசு 1977இல் இவருக்கு 'பத்மபூஷண்' என்னும் உயரிய விருதினை வழங்கிக் கௌரவித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னை சங்கீத வித்வசபை 1973இல் இவருக்குச் சங்கீத கலாநிதிப் பட்டத்தினை வழங்கியது. தாகூர் நிறுவிய ரவீந்திர பாரதி பல்கலைக்கழகம் பால சரஸ்வதியின் அரும் பணிகளைப் பாராட்டும் வகையில் 'கலாநிதி'ப் பட்டமளித்துக் கௌரவித்தது. இருபதாம் நூற்றாண்டில் இசை, நடனத்துறையில் தனக்கெனத் தனியான பாணி ஒன்றினை வகுத்துக் கொண்ட அபிநய அரசி பால சரஸ்வதி தமது இறுதி மூச்சுள்ள வரை பரதக் கலை வளர்ச்சிக்குத் தொண்டாற்றினார். பரதக் கலை தொடர்பான பல கட்டுரைகளைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார். பிரபல திரைப்படக் கலைஞர் சத்யஜித்ரே தயாரித்த (1977ஆம் ஆண்டில்) பரதநாட்டியம் பற்றிய திரைப்படமொன்றில் இவரது நடனக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன. தமது ஐம்பத்தெட்டாவது வயதிலும் சோர்வின்றி பாவ ரசங்கள் பளிச்சிடச் சிறப்பாக ஆடி சத்யஜித்ரேயின் பாராட்டையும் பெற்றுக் கொண்டார். பரதக் கலையே உருவெடுத்தாற் போன்று விளங்கிய பால சரஸ்வதி தமது அறுபத்தாறாவது வயதில் 1984இல் மறைந்தார். அபிநய அரசி மறைந்தாலும் அவரது தொண்டும் சிறப்பும் என்றும் மறையாது அவரை நினைவூட்டுமென்பதில் ஐயமில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடனக்கலை

## அன்றும் இன்றும்

**நடனம் :**

மனிதனின் ஒலி இசையாக பரிணமித்தது போல் அவனது அங்க அசைவுகள் நடனமாக வெளிப்பட்டது. காலத்திற்கும், பிரபஞ்சத்தின் பரந்த வெளிக்கும் ஓர் இணைப்பை ஏற்படுத்துவது நடனமாகும். சிந்து சமவெளி நாகரிக காலந்தொட்டே இந்தியாவில் நடனமும், கூத்தும் ஒன்றென நிலவி வந்துள்ளது. சங்கம் மருவிய காலத்தினைச் சேர்ந்த சிலப்பதிகாரத்தில் நடனம், மேடையமைப்பு போன்றவை விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இதனையடுத்து சிற்பங்களும், ஓவியங்களும் கல்வெட்டுகளும் அவ்வக் காலத்தில் நிலவி வந்த நடன முறைகள் பற்றிக் கூறுகின்றன. கல்வெட்டுகளில் கோயில்களில் நடனமாடிய தேவதாசிகள் முறைபற்றியும் அக்காலத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த மரியாதைகள் பற்றியும் சொல்லப்பட்டுள்ளன. தஞ்சை பிரகதீசுவரர் கோயிலிலும், சிதம்பரம் நடராஜர் கோயிலிலும் 108 கரணங்களின் அமைப்பைத் தெரிவிக்கும் சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேற்கத்திய பண்பாட்டின் செல்வாக்காலும், சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களாலும் தமிழகத்தில் சிறப்புப் பெற்றிருந்த பரதநாட்டியம், தேவதாசிகளோடு தொடர்புபடுத்தப்பட்டது. இதனால் நாட்டியத்திற்கு எதிர்ப்புக் கிளம்பியது. இத்துடன் தேவதாசிகளின் பொருளாதார நிலையில் ஏற்பட்ட சிக்கலினாலும் நடனத்துறை 1925 வரை ஆதரவின்றித் தவித்தது.

நடனத்திற்குப் புதிய பொலிவும், சமூக மரியாதையும் பெற்றுத்தந்தவர் ருக்மணி தேவியாவார். 1925 வாக்கில் இத்துறையில் பின்னாளில் சிறப்பான தேர்ச்சி பெற்றவரும் பாண்டித்தியம் கொண்டவருமான இ. கிருஷ்ண ஐயர், நாட்டிய ஆச்சாரியார் மெலட்டூர் நடேச ஐயரிடம் பரதநாட்டியம் பயின்று தொடர்ந்து ஏழாண்டு காலம் கட்டளையாகவும், பயிற்சியாகவும் ஏற்று அதன் மீட்டுயிர்ப்புக்காகப் பாடுபட்டார். கிருஷ்ண ஐயர் பரதநாட்டியம் மற்றும் பாகவ மேளாவிற்குச் செய்த பணியானது, மணிப்பூர் நடனத்திற்குத் தாகூரும் கதகளிக்கு வள்ளத்தோளும் செய்த தொண்டிற்கு இணையானவையாகும். இவர் 1928


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் சென்னை மியூசிக் அக்காடமியைத் தொடங்கினார். சென்னை பரதநாட்டிய சங்கத்தின் தலைவராகவும் இருந்தார். இந்நூற்றாண்டின் நடுப்பகுதியில் இக்கலையை கோயிலில் நடத்தத் தடைவிதிக்கப்பட்டது. பின்பு சில ஆண்டுகளுக்குப் பின் அத்தடை தானாகத் தளர்ந்து போனது.

இன்று தமிழகத்தில் நடைபெற்று வரும் பரதநாட்டியம் பரத முனிவரின் நாட்டிய சாத்திரத்தையும், நந்திகேசுவரரின் அபிநய தர்ப்பணத்தையும் தழுவியது. எனினும் அதன் அமைப்பு முறையானது, 18ஆம் நூற்றாண்டில் தஞ்சையில் வாழ்ந்த சகோதரர்களான சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகியோர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். முத்துச்சாமித் தீட்சிதரின் மாணவர்களாகிய இவர்கள் ஆடற்கலையைத் தமிழகத்தில் பிரபலப்படுத்தினர். இவர்கள் இசை மற்றும் நாட்டிய குருக்கள் (நட்டுவனார்கள்) ஆவர். இவர்களுக்கும், இவர் தம் வழி வந்தவரான பந்தநல்லூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை மற்றும் அவரது மாணவிகளான தேவதாசிகளுக்கும் தமிழகத்து நாட்டிய உலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. பரதநாட்டியத்தின் முக்கிய பாங்குகளாவன அலாரிப்பு மற்றும் நடனம் ஆடினார் என்பதாகும். இந்நடனத்தின் முக்கிய மூன்று கூறுகளான பாவம், ராகம், தாளம் என்னும் மூன்று சொற்களின் முதல் எழுத்துக்களின் கூட்டமைப்பே பாரத அல்லது பரத நாட்டியம் என்றாயிற்று. நட்டுவானர்கள் இக்கலையை சொல்லிக் கொடுக்கவும் பாதுகாக்கவும் செய்தனர். தேவதாசிகள் அதனை ஆடிக்காட்டினர். நட்டுவனார்கள் பெரும்பாலும் பிராமணரல்லாதவராவர். சமஸ்கிரு தத்திலும், தமிழிலும், சாத்திரத்திலும் வல்லவராயிருந்தனர். பரதநாட்டியம் அண்மைக்காலம் வரை தாசி ஆட்டம் அல்லது சதிராட்டம் எனப்பட்டது. பரதநாட்டியம் அலாரிப்பு, ஜதீஸ்வரம், சப்தம், வர்ணம், பதம் மற்றும் தில்லானா ஆகிய பல நிலைகளைக் கொண்டதாகும்.

சென்னை அடையாறைச் சேர்ந்த ருக்மணி தேவி தென்னிந்தி யாவிற்குச் சொந்தமான பரதநாட்டியத்தின் முக்கியத்துவத்தை உணரவைத்ததோடு, அதனை மரபு வழியாக மட்டும் இன்றி, நாட்டிய நாடகமாகவும் கூட்டுநடன இசையாகவும் நிகழ்த்துவதற்கு வழிவகுத்தார். அவரால் தொடங்கப்பட்ட அடையாறு கலாஷேத்திர கலை மையத்தில் பரதநாட்டியமும், கதகளியும் சிறப்பாகப் பயிற்சியளிக்கப்பட்டு பல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடைகளில் அரங்கேற்றமானது. இத்தொன்மைச் சிறப்பான நடனத்தினை நுட்பத்திற்காக மட்டுமன்றி சமுதாய வரலாறு மற்றும் பண்பாட்டு அடிப்படையிலும் கற்றுக் கொடுத்ததே அவரது சிறப்பு அம்சமாகும். இவரது நாட்டிய நாடகங்களில் குறிப்பிடத்தக்கவை குமார சம்பவம், கீதாகோவிந்தம், விஜய தேவரின் ராதாகிருஷ்ணன் பாட்டு மற்றும் இராமாயணம் ஆகும். இவரால் கலாஷேத்திராவில் தொடங்கப்பட்ட நூற்பு மையத்தில் இவர் நடனக்கலைஞர்களுக்குத் தேவையானதும், பழமையானதுமான பல ஆடை வடிவங்களின் மாதிரிகளை உற்பத்தி செய்தார்.

இத்துறையின் அடுத்த முக்கிய நாட்டியக் கலைஞர் பாலசரஸ்வதி ஆவார். இவர் வீணைக் கலைஞா தனத்தின் பேத்தியும், பாடகர் ஜயம்மாவின் மகளுமாவார். இவரது நாட்டியத்தில் முழு நிறைவினைக் காணலாம். அவரது அபிநயம் நாட்டியக் கலை உலகில் மறக்க முடியாத சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது. இதே போன்ற முழுமையான காட்சிகள் மூலம் இக் கலையை வளர்த்தவர்கள் கல்யாணி சகோதரிகள். கிருஷ்ணய்யரால் திறமையாக வளர்க்கப்பட்ட கலைஞர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் ராம் கோபால், பாலசரஸ்வதி, குமாரி கலா நிதி, கும்பகோணம் வரலட்சுமி போன்றவர்களாவர். இக்காலகட்டத்தில் நாட்டியக் கலைஞர்களை ஊக்குவித்தும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தும் இக் கலைக்குப் புத்துயிர் கொடுத்த குருக்கள் வரிசையில் குறிப்பிடத் தக்கவர்கள் பொன்னையா பிள்ளை, தஞ்சை மாவட்டம் பந்த நல்லூரைச் சேர்ந்த மீனாட்சி சுந்தரம் பிள்ளை மற்றும் முத்துக்குமரன் பிள்ளை, சொக்கலிங்கம்பிள்ளை, முத்துச்சாமிப் பிள்ளை, கந்தப்ப பிள்ளை, வழுவூர் இராமய்யா பிள்ளை, கே. என். பக்கிரிசாமிப் பிள்ளை போன்றவராவர். இவ் வரிசையில் போற்றத்தக்கவர்களில் இராஜ ராஜேஸ்வரி பரத நாட்டிய கலைக்கழகத்தை பம்பாயில் தொடங்கிய கோவிந்தராஜ பிள்ளையும் ஒருவராவார். பந்தநல்லூர் மற்றும் வழுவூர் பாணிகள் தத் தமக்குரிய முறையில் நாட்டியத்தை வளர்த்தன. முன்னது கோயிற் சிலைகளைப் போல நேரடியாகவும், வேகத்தோடும் நுணுக்கங்களையும் இயக்கத்தினையும் காட்டுவதாக அமைந்தது. பின்னதில் நுணுக்கத்தில் சிரத்தை காட்டுவதோடு, தொன்மங்களில் கூறப்பட்டிருப்பதை நினைவூட்டும் பெண்மையும் அதிகம் காட்டப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகினிதேவி என்பார் பரதநாட்டியத்திலும், கதகளியிலும் பாண்டியத்தியம் பெற்று இந்தியா முழுவதிலும் அவற்றைப் பரப்பினார். இலண்டன் பல்கலைக் கழகத்திலும், ஐரோப்பாவிலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் விரிவுரையாற்றியதோடு நடனத்தை நிகழ்த்தியும் காட்டினார். இந்தியாவில் இவரது பணியினால் உந்தப்பட்டு நாட்டியம், அதன் தத்துவம் மற்றும் அது தொடர்பான ஆழமான கருத்துக்களை ஆராயும் பணியில் பலர் ஈடுபடத் தொடங்கினர். அவர்களில் ராகினிதேவியின் மகளான இந்திராணியும் ஒருவர். இவர் பரத நாட்டியத்தோடு ஒடிசி, குச்சிப்புடி, மோகினியாட்டத்திலும் தேர்ச்சி பெற்றார். ஒடிசியையும் குச்சிப்புடியையும் நாட்டிய நாடகங்களாக நடத்தினார். இவரைப் போன்றே கேரளம், ஆந்திரம், கர்நாடகப் பகுதிகளிலும் பலரும் இக்காலகட்டத்தில் தத்தம் பகுதிகளில் சிறப்பாகச் செயற்பட்டனர்.

திரைப்பட நடிகை வைஜயந்திமாலா பரதநாட்டியத்திலும் தென்னிந்திய நாட்டுப்புற நடனங்களிலும் சிறந்த தேர்ச்சி பெற்றவர். திரைப் படங்களில் அவரது பரதநாட்டியம் கரவொலிகளை எழுப்பத் தவறியதில்லை. இவரும் இந்தியாவின் பல பகுதிகளிலும் மற்றும் வெளிநாடுகளிலும் இக்கலையைப் பரப்புவதில் பெரும்பங்கு கொண்டுள்ளார். சென்னையில் நடனப் பள்ளி ஒன்று நடத்திய இவர் தனது குழுவில் இருந்தவர்களுக்கும் மற்றும் பல இளைய தலை முறையினருக்கும் பாரம்பரியம் மிக்க பரதக்கலை நடனம் கற்றுக் கொடுத்துள்ளார். மற்றொரு திரைப்பட நடிகையான ஜோதிலெட்சுமி சிறந்த ஆடற்கலை வல்லுநராகத் திகழ்ந்தார். அவரது நடனத்தை மேடைகளில் கண்ட பலர் இக்கலைக்கு மிகப் பெரும் புத்துணர்வு கிடைக்கப் போவதாக நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால் அவரோ திரைப்படத்துறையில் நுழைந்ததும் தம் வழியை மாற்றிக் கொண்டார். யாமினி கிருஷ்ணமூர்த்தி பரதநாட்டியம், குச்சிப்புடி மற்றும் ஒடிசியில் தேர்ச்சி பெற்ற கலைஞராவார். குமாரி கமலா இளைய தலைமுறைகளின் மூத்த பரதநாட்டியக் கலைஞராவார். இயற்கையிலேயே கருணையும், நாட்டியத்திற்கேற்ற நளினமும், உடற்கூறுகளும் கொண்ட இவரது தூய்மையான நடனம், தில்லானாவிலும், ஜதீஸ்வரத்திலும், வர்ணத்திலும் திறம்படக் காட்டப்பட்டு இவருக்குப் பெரும் புகழ்சேர்த்தது. எம். கே. சரோஜாவின் நாட்டியத்தைக் காண்பது பரவசமூட்டுவதாக கருதப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய பாவனையும், உணர்வு வெளிப்பாடும், அங்க அசைவுகளும், சிற்பங்களை நினைவூட்டுவனவாகும். உணர்வுகளை வெளிப்படுத்துவதில் அவரது நடனம் தேவதாசி ஆட்டத்தைப் பெரிதும் ஒத்ததாகவே இருந்தது. இவர் சுமார் மூன்றாண்டு காலம் ராம்கோபாலுடன் பல இடங்களுக்கும் சென்று ஆடினார். மும்பை ரசிகர்களைக் கவர்ந்த குமாரி சுதா துரைச்சாமி நாட்டியத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு அதன் தூய்மையைப் பின்பற்றி, பல்திறன் இயக்கத்தையும் கலை வேலைபாட்டையும் ஒருங்கிணைத்தார். திருவிதாங்கூரைச் சேர்ந்த லலிதா, பத்மினி, ராகினி சகோதரிகள் தனித்தனியாகவும், கூட்டாகவும் பரதநாட்டியம், மோகினியாட்டம் மற்றும் நாட்டுப்புற நடனங்களை ஆடினர். அவர்கள் அசைவுகளிலும் கருத்துவிளக்கத்திலும் முழுமையான திறனைக் காட்டினர். குமாரி ராதா, குமாரி மீனாட்சி, கனகாம்புஜம், இ.வி. சரோஜா போன்ற நாட்டியக் கலைஞர்களும் இங்கு குறிப்பிடத் தக்கவர்கள்.

பரதநாட்டியம் பற்றி ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றுள்ள பரத நாட்டியக் கலைஞர் பத்மா சுப்பிரமணியமும் அவரது மாணவிகளும் உடல் அசைவுகள், நடன இயக்கத்திறன் போன்றவற்றில் ஒரே அச்சில் வார்த்தது போல் செயல்படுவது பாராட்டத்தக்க ஒன்றாகும். இதே வரிசையில் அலர்மேல் வள்ளி மற்றும் அவரது மாணவிகள் சுதாராணி, ரகுபதி மற்றும் அவரது மாணவர்கள், சித்ரா விஸ்வேஸ்வரன் மற்றும் அவரது மாணவிகள் இலட்சுமி விஸ்வநாதன் மற்றும் அவரது மாணவிகளையும் சேர்க்கலாம். இலட்சுமி விஸ்வநாதனும் அவரது மாணவிகளும் அபிநயத்தின் போது இசைக்கேற்றபடி தலையையும் அசைக்கும் பாங்குடையவர்கள். மரபு வழியான ஆடைமுறைகள், ஆபரணங்கள் வண்ணங்கள் ஆகியவை தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ருக்மணி தேவியின் ஆடை அமைப்புக்கள் பலராலும் பின்பற்றப்பட்டு வருகின்றன.

### பாகவத நாடகம்.

பரதநாட்டியத்தில் முக்கியத்துவம் குறையத்தொடங்கிய போது அக்கலையைப் பாதுகாப்பதற்காக, பிராமண வகுப்பைச் சேர்ந்த பாகவதர்கள் என்னும் ஒரு குழுவினர் நாட்டிய நாடகங்களை நடத்தினர். இதில் குறிப்பிட்ட இடம் பெற்றது கர்நாடக இசையும் பரதநாட்டியமுமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் பாடல்கள் தெலுங்கிலும், வசனங்கள் தமிழிலும் இருக்கும். இதில் பெண்களுக்கு திஸ்ரகதி தாளத்திலும், ஆண்களுக்கு சதுஸ்ரகதி தாளத்திலும் நடனம் அமைந்திருக்கும். இதிலிருந்து தான் பரத நாட்டியத்தில் அலாரிப்பு நாட்டியவகை தோன்றியிருக்கின்றது. இதில் மெலட்டூர் வெங்கட்ராம சாத்திரியார் இயற்றியுள்ள பிரகலாத சரித்திரம், ருக்மணி கல்யாணம், உஷா பரிணயம் போன்றவை அதிகமாக நடத்தப் பெறுகின்றன. ஆண்கள் மட்டுமே இடம்பெறும் இக்கலை தஞ்சை மாவட்டத்தில் சூலமங்கலம், மெலட்டூர், சாலியமங்கலம், ஊத்துக்காடு, நல்லூர், தேப்பெருமாள் நல்லூர் ஆகிய கிராமங்களில் மட்டுமே நடத்தப் பெறுகின்றன.

## நாட்டுப்புற நடனங்கள்

இந்தியா முழுவதும் பிரபலமடைந்துள்ள நாட்டுப்புற ஆடற் கலைகளில் கோலாட்டம் ஒன்று. இது தமிழகத்தில் பெருமளவில் ஆடப்பட்டு வந்தது; எனினும் இன்று அது மெல்ல மறைந்து வருகிறது. சிறு குச்சிகளைக் கையில் வைத்துக் கொண்டு ஆடுவது கோலாட்டம் ஆகும். இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் இவ்வாட்டம் பள்ளியில் படிக்கும் பெண்கள் மத்தியில் பிரபலமாயிருந்தது. பசவா என்ற அசுரன் எவராலும் கட்டுப்படுத்த முடியாதவனாக இருந்தான். அவன் முன்பு சில பெண்கள் பாடிக் கொண்டே கோலாட்டம் ஆடிய போது மனம் நெகிழ்ந்தான். தனது தீய எண்ணங்களை விட்டொழித்தான் என ஒரு நாட்டுப் புறக்கதை சொல்கின்றது. தமிழகத்தில் கோலாட்டம் திருவிழாக்களில் இன்றும் நிகழ்த்தப் பெறுகின்றன.

கும்மி என்பது நாட்டுப்புறப் பாடல்களுக்கேற்ப கைத்தாளத்தோடு நடனம் ஆடுவதாகும். இது திருவிழாக் காலங்களில் இன்றும் நிகழ்த்தப் பெறுகின்றது. இது கும்மி, ஒயில் கும்மி, மாவனக்கும்மி என்று வகைப் படுத்தப்படுகின்றது. சுதந்திர இயக்க கொள்கைகளைப் பரப்புவதற்காகப் பாரதியார் கும்மிப் பாட்டுக்களைப் பாடியுள்ளார். இன்றும் கிராமங்களில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் நாட்டுப்புறக் கலைகள், தேசியக் கருத்துடைய பாடல்கள், தெய்வங்கள் தொடர்பான கதைப்பாடல் ஆகியன பாடப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரத்தில் மரக்கால்கள் வைத்து ஆடப்படும் ஆட்டம் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. இது பொய்க்கால் குதிரை ஆட்டத்தோடு தொடர்பு கொண்டதாகும். பொய்க்கால் குதிரை சோழர் காலத்திலேயே பிரபலமடைந்துள்ளது. தஞ்சை மராட்டியர் ஆட்சிக்காலத்தில் சிறப்பிடத்தைப் பெற்ற இவ்வாட்டம் தமிழகத்தின் பல பகுதிகளிலும் ஆடப் படுகின்றது. பொய்க்கால் குதிரையில் குதிரைக்கும் பொய்க்காலாக மனிதனின் காலே பயன்பட்டு வருகின்றது. சில நேரங்களில் மரத்தாலான கால்களும் மனிதக்காலோடு கட்டி இணைக்கப்பட்டிருக்கும். தற் காலத்தில் ராஜா-ராணி வேஷம் தவிர்த்து, சமயத் தொடர்பான கதைகளும் இக்கலைக்குக் கதைகளாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளன.

கோயில்களில் நடைபெறுகின்ற கும்பமேளம், பூர்ண கும்பம் போன்ற சடங்குகளோடு தொடர்புடைய கலசம் அல்லது கும்பமே கரகாட்டத்தின் தொடக்கமாகும். இவ்வாட்டத்தின் போது கலசம் தலையிலிருந்து விழாமலிருக்க அதன் அடிப்பகுதியில் பள்ளம் அமைத்திருப்பர். இது பன்னெடுங்காலமாக இம்மண்ணில் நிலவி வருகின்றது. இவை தவிர நாட்டிய மற்றும் நாடக அமைப்பைக் கொண்ட பிற நாட்டுப்புறக் கலைகளாவன: குறவஞ்சி, பகல்வேஷம், ராஜா-ராணி, வில்லுப்பாட்டு, அரையர் நடனம், மயிலாட்டம், வள்ளி திருமணம், அரிச்சந்திர நாடகம், அல்லி அரசாணி, ஆடித்தபசு நாடகம், பிரகலாத நாடகம், நொண்டி நாடகம், மாவலி நாடகம், இருளர் நாடகம், வீரபாண்டிய கட்டப்பொம்மன் நாடகம், சத்தியவான் சாவித்திரி போன்றவை. இவற்றில் பல திருவிழாக் காலங்களில் நடத்தப்படுபவையாகவுமுள்ளன.

– "மனோரமா"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20ஆம் நூற்றாண்டில் இலங்கையில் பரதநாட்டியத்தின் கலாசாரப் பின்னணி.

இலங்கைத் திருநாட்டில் புராதன காலந்தொட்டுப் பரத நாட்டியம் நிலவிவந்துள்ளது. தென்னிந்திய கலாசாரத் தொடர்புகள் இதற்குத் துணைபுரிந்துள்ளன. இலங்கையில் உள்ள சைவாலயங்களில் சதிர்க் கச்சேரிகள் நடைபெற்று வந்துள்ளமையை வரலாறுகள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவிவரும் வடமோடி, தென்மோடி நாட்டுக் கூத்து மரபுகளும் நமது கலாசாரப் பின்னணியை விளக்குவனவாக உள்ளன.

இலங்கைத் தமிழர் மத்தியில் இசை, நடன மரபுகள் இந்துக் கோயில்கள் மூலமே வளர்ச்சி பெற்றன. யாழ்ப்பாணத்தில் தமிழரசு நிலவிய காலத்தில் இக்கலைகள் மிக உன்னதமான இடத்தைப் பெற்றிருந்தன. பொலநறுவ, தெவிநுவர போன்ற இடங்களில் இருந்த கோவில்களில் தேவரடியார்கள் இருந்து இசை, நடனப் பணிகள் புரிந்தமைக்கான சான்றுகள் உள்ளன. யாழ்ப்பாணத்தில் தமிழ் அரசர் ஆட்சிக் காலத்தில் பரதநாட்டியக் கலை மிகச் சிறப்புற்று விளங்கியது. இக் காலத்தில் எழுந்த வையாபாடல், கைலாயமாலை முதலிய நூல்களிலே நடனக் கலை பற்றிய குறிப்புக்கள் சில காணப்படுகின்றன.

இலங்கையில் 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் போன்ற அந்நியரின் படையெடுப்பினால் நமது கலாசாரத்திற்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது. அந்நியரின் ஆட்சிக்கு இலங்கையின் கரையோர மாகாணங்கள் உட்படுத்தப்பட்ட போது புராதன இந்து ஆலயங்கள் பலவும் அழிக்கப்பட்டன. இதனால் பரதநாட்டியக் கலை வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டது. மேலைத்தேய கலாசாரம் தலைதூக்கியது. சுதேசக் கலைகள் மதிப்பிழந்து மங்கின.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் சிறிது வளர்ச்சி காணப்பட்ட போதிலும் அரச ஆதரவு எதுவும் கிட்டவில்லை. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கையில் கலை வளர்ச்சிக்குப் புத்துயிரளிக்க முற்பட்டவர்களில் கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி குறிப்பிடத்தக்கவராவார். இவர் இயல்பாகவே கலைகள் மீது ஆர்வம் கொண்டவர். இவர் அபிநயதர்ப்பணம் எனும் பரதக் கலை நூலை ஆங்கிலத்தில் மொழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்ப்புச் செய்து வெளியிட்டார். பரதக் கலையின் சிறப்புக்கு எடுத்துக் காட்டாக இலங்கும் சிவ நடனம் குறித்து இவர் எழுதிய நூல் உலகப் புகழ் பெற்றது. இவர் இலங்கையின் கலை வளர்ச்சி தொடர்பான பல நூல்களை எழுதி வெளியிட்டதன் மூலம் இலங்கையின் கலை வளர்ச்சிக்குப் புத்துயிர் அளித்தார். தமிழர்தம் கலை வளர்ச்சிக்கு மட்டுமன்றிச் சிங்களவர்தம் கலை வளர்ச்சிக்கும் இவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியன.

சுவாமி விபுலாநந்தரின் யாழ் நூல், மதங்க சூளாமணி போன்ற நூல்களும் இசை, நடன, நாடக வளர்ச்சிக்குத் துணை புரிந்தன எனலாம்.

நாடு விடுதலை பெற்றதன் பின்னர் இசை, நடனக் கலைகளின் வளர்ச்சி துரிதமுற்றது. இலங்கையில் பரதக் கலை வளர்ச்சிக்கு – அதன் மறுமலர்ச்சிக்குத் தொண்டாற்றியவர்களில் திரு. ஏ. சுப்பையா, திரு. எம்.எஸ். நவரத்தினம், திருமதி. மகேஸ்வரி நவரத்தினம், திரு. ம. கைலாய பிள்ளை, திரு. தொம்மைக் குட்டி, பிரம்மஸ்ரீ, ந. வீரமணிஐயர், திரு. வேல் ஆனந்தன், திரு. எஸ்.ஆர். இராஜ நாயகம் ஆகியோர் குறிப்பிடத்தக்கோராவர். தமிழ் நாடக வளர்ச்சிக்குக் கலையரசு க. சொர்ணலிங்கம் ஆற்றிய சேவைகளும் என்றும் நினைவு கூரத் தக்கனவாகும்.

இலங்கையில் 1972 ஆம் ஆண்டு கல்விச் சீர்திருத்தத்திற்கமைய அழகியற்கல்வி ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பேறாகச் சங்கீதம், சித்திரம், நடனம் ஆகிய கவின்கலைகள் பாடசாலைகளில் கற்பிக்கப்படும் நிலை உருவானது. இவற்றுள் விரும்பிய ஒன்றினை மாணவர் தெரிவு செய்து ஆறாம் வகுப்பு முதல் பதினோராம் வகுப்பு வரை கற்கும் வாய்ப்பினைப் பெற்றனர். க.பொ.த. உயர் தரத்திலும் பரதம் ஒரு பாடமாகத் தற்போது கற்பிக்கப்படுகிறது.

யாழ். பல்கலைக்கழகத்தின் நுண்கலைப் பிரிவில் இக் கலைகள் கற்பிக்கப்படுகின்றன. நுண்கலைப் பட்டதாரிகள் உருவாக்கப் படுகின்றனர். இங்கு நாட்டியக் கலைமணிப் பட்டம் வழங்கப்படுகிறது. கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பரதநாட்டியம் விசேட பாடமாகப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. இவற்றைத் தவிர தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்பட்டு வரும் தொலைக் கல்வி ஆசிரிய பயிலுநருக்கான தொலைக்கல்வி பாடநெறியிலும் பரதக் கலை ஒரு விசேட பாடநெறியாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட இலங்கை சங்கீத சபை வருடந்தோறும் பரதக் கலைப் பாடப் பரீட்சைகளை நடத்திச் சித்தி பெறுவோருக்குச் சான்றிதழ்களை வழங்கி வருகிறது. தற்போது இலங்கையின் பல பாகங்களிலும் பரதக் கலை வகுப்புக்கள் பல நடைபெற்று வருவதும் பெருந்திரளானோர் இவ் வகுப்புக்களில் பங்கு கொண்டுவருவதும் பரதக் கலை வளர்ச்சிக்குச் சான்று பகருகின்றன.

இலங்கையில் உள்ள தொலைக்காட்சி நிலையங்களும் பரதக் கலை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி வருகின்றன. ஆடற்கலை நிகழ்ச்சிகள் பலவற்றை அவை ஒளிபரப்பிவருகின்றன. பரதக் கலை தொடர்பான நூல்கள் பலவற்றை இலங்கையில் உள்ளோர் பலர் எழுதி வெளியிட்டுள்ளனர். பரதக் கலை பயில்வோருக்கு இந்நூல்கள் பெரிதும் துணைபுரிகின்றன.

குறிப்பிடத்தக்க நூல்கள் சில வருமாறு :-

| | நூல்கள் | எழுதியவர். |
|---|---|---|
| 1. | பரதக்கலை | பேராசிரியர் வி. சிவசாமி |
| 2. | தென்னாசிய கலை வடிவங்களில் நாட்டிய சாஸ்திர மரபு | பேராசிரியர் வி. சிவசாமி |
| 3. | தென்னாசிய சாஸ்திரீய நடனங்கள் ஒரு வரலாற்று நோக்கு. | பேராசிரியர் வி. சிவசாமி |
| 4. | காலந்தோறும் நாட்டியக் கலை | கார்த்திகா கணேசர் |
| 5. | பரதநாட்டியக் கலை, அருங்கலை ஆடற்கலை. | சுபாஷினி பத்மநாதன் |
| 6. | நிருத்தியம். | மீரா மங்களேஸ்வரன் |
| 7. | பரத நாட்டியக் கலை | லீலாம்பிகை செல்வராசா |
| 8. | பரத நாட்டியக் கலை | செல்வி நிலா இளங்கோவன் |
| 9. | பரத நாட்டிய அழகியல் | பேராசிரியர் சபா. ஜெயராசா |

இன்று புலம் பெயர்ந்த நாடுகள் பலவற்றிலும் இலங்கையைச் சேர்ந்த நடனக் கலைஞர்கள் பலர் பரதக் கலையினைக் கற்பித்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரதக்கலை வளர்த்தோர்

### தஞ்சை நால்வர்



தஞ்சாவூர் சின்னையா



தஞ்சாவூர் பொன்னையா




தஞ்சாவூர் சிவானந்தம்




தஞ்சாவூர் வடிவேலு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதக்கலை வளர்த்தோர்



பந்தணை நல்லூர்
சூ. மீனாட்சிசுந்தர நட்டுவனார்



தஞ்சாவூர் க. பொன்னையா
பிள்ளை



வழுவூர் மாணிக்க நட்டுவனாரும்
வழுவூர் ராமய்யா பிள்ளையும்



வைத்தீஸ்வரன் கோவில்
முத்துஸ்வாமி நட்டுவனார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 108 கர்ணங்கள்


1


2


3


4


5


6


7


8


9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


10


11


12


13


14


15


16


17


18


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



19



20



21



22



23



24



25



26



27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


28


29


30


31


32


33


34


35


36



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



37



38



39



40



41



42



43



44



45



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


46

47

48

49

50

51

52

53

54


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



55



56



57



58



59



60



61



62



63


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


64


65


66


67


68


69


70


71


72


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


73


74


75


76


77


78


79


80


81


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


82


83


84


85


86


87


88


89


90


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





91

92

93





94

95

96





97

98

99


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



100



101



102



103



104



105



106



107



108


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபெருமான் ஆடிய 108 தாண்டவ பேதங்கள் (108 கரணங்கள்)

1. தலபுஷ்பபுடம்
2. வர்த்திதம்
3. வலிதோருகம்
4. அபவித்தம்
5. சமநகம்
6. லீநம்
7. சுவஸ்திகரேசிதம்
8. மண்டலசுவஸ்திகம்
9. நிகுட்டம்
10. அர்த்தநிகுட்டம்
11. கடிச்சின்னம்
12. அர்த்தரேசிதம்
13. வக்ஷஸ்வஸ்திகம்
14. உன்மத்தம்
15. சுவஸ்திகம்
16. பிருஷ்டசுவஸ்திகம்
17. திக்சுவஸ்திகம்
18. அலாதம்
19. கடீசமம்
20. ஆக்ஷிப்தரேசிதம்
21. விக்ஷிப்தாசிப்தகம்
22. அர்தசுவஸ்திகம்
23. அஞ்சிதம்
24. புஜங்கதிராசிதம்
25. ஊர்த்வஜாநு
26. நிகுஞ்சிதம்
27. மத்தல்லி
28. அர்தமத்தல்லி
29. ரேசகநிகுட்டம்
30. பாதாபவித்தகம்
31. வலிதம்
32. கூர்ணிதம்
33. லலிதம்
34. தண்டபக்ஷம்
35. புஜங்கதிரசுதரேசிதம்
36. நூபுரம்
37. வைசாகரேசிதம்
38. பிரமரம்
39. சதுரம்
40. புஜங்காஞ்சிதம்
41. தண்டரேசிதகம்
42. விருச்சிககுட்டணம்
43. கடிப்பிராந்தம்
44. லதாவிருச்சிகம்
45. சின்னம்
46. விருச்சிகரேசிதம்
47. விருச்சிகம்
48. வியசிதம்
49. பார்ச்வநிகுட்டகம்
50. லலாடதிலகம்
51. கிராந்தம்
52. குஞ்சிதம்
53. சக்ரமண்டலம்
54. உரோமண்டலம்
55. ஆக்ஷிப்தம்
56. தலவிலாசிதம்
57. அர்களம்
58. விக்ஷிப்தம்
59. ஆவிருத்தம்
60. தோலபாதகம்
61. விவிருத்தம்
62. விநிவிருத்தம்
63. பார்ச்வக்ராந்தம்
64. நிசும்பிதம்
65. வித்யுத்பிராந்தம்
66. அதிகிராந்தம்
67. விவர்த்திகம்
68. கஜக்ரீடிதகம்
69. தலசம்ஸ்போடிதம்
70. கருடப்லுதகம்
71. கண்டஸூசி
72. பரிவிருத்தம்
73. பார்சவஜாநு
74. கிருத்ராவலீநகம்
75. சந்நதம்
76. ஸூசி
77. அர்தஸூசி
78. ஸூசிவித்தம்
79. அபக்ராந்தம்
80. மயூரவலிதம்
81. சர்ப்பிதம்
82. தண்டபாதம்
83. ஹரிணப்லுதம்
84. பிரேங்லுதம்
85. நிதம்பம்
86. ஸ்கலிதம்
87. கரிஹஸ்தகம்
88. பிரசர்ப்பிதகம்
89. சிம்ஹவிக்விடீதம்
90. சிம்ஹாகர்சிதகம்
91. உத்விருத்தம்
92. உபஸ்ருதம்
93. தல கட்டிதகம்
94. ஜநிதம்
95. அவஹித்தகம்
96. நிவேசம்
97. ஏலகாக்ரீடம்
98. ஊருத்விருத்தம்
99. மதஸ்கலிதம்
100. விஷ்ணுகிராந்தம்
101. சம்பிராந்தம்
102. விஷ்கம்பம்
103. உதகட்டிதம்
104. விருஷபகரீடிதம்
105. லோலிதம்
106. நாகாபஸர்ப்பிதம்
107. சகபாஸ்யம்
109. கங்காவதரணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனையாகிறது !

பரதக் கலை பயில்வோருக்குப் பயன்தரும் நூல்





விற்பனையாளர் :

**லங்கா புத்தகசாலை,**
F.L.1-14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர,
கொழும்பு - 12.
தொடர்பு : 2341942

ISBN 955-1162-26-9

9 789551 162269

விலை : ரூபா. 150.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org